பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 19 | வெள்ளிக்கிழமை | (05.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 351

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## நாட்டின் முக்கிய தலைவர் பிரபாவுக்கு தூது அனுப்பினார்

(கொழும்பு)

நாட்டின் அதியுயர் பதவியில் உள்ள முக்கிய நபர் ஒருவர் இரகசியமாக விஷேட தூதுவர் ஒருவரை நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்துள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நெருங்கிய நட்புறவைக் கட்டியெழுப்பும் நோக்குடனே இவ்விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் முக்கிய நபர் முன்னாள் மேன்முறையீட்டு நீதிபதியின் மகன் என்றும் தெரியவருகின்றது. அத்துடன் பிரபாகரனின் நெருங்கிய ஆலோசகரான வி.உருத்திரகுமாரனின் தனிப்பட்ட நண்பரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களிடையேயான சந்திப்பு இன்று நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)

## புலிகளின் சமாதான வெளிப்பாடு திருப்தி தருவதாக இல்லை

### இந்திய வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலாளர் கருத்து

(நமது நிருபர்).

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களில் விடுதலைப் புலிகள் இதுவரை காலமும் காட்டிய வெளிப்படுத்தல்கள் குறித்து திருப்தியடைய முடியாது.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.கே.ராஜ்கோத்திரா தெரிவித்துள்ளார்.

இல்ங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ராஜ்கோத்திரா நேற்று கொழும்பில் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும்பேசுகையில், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து

(10ம் பக்கம் பார்க்க)

## முடிபுகள் எதுவும் எடுக்காதவரை

# ஜனாதிபதியும் பிரதமரும் பேசுவதில் அர்த்தமில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடிக்கு,தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதன் மூலமோ, அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சை உருவாக்குவதன் மூலமோ எந்தவொரு தீர்வையும் ஏற்படுத்த முடியாது**

**இவ்வாறு நேற்று நடைபெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டில் அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம் பெற்றது. ... கையில்;

நாட்டின் அரசியல் சூழலில் உருவாகியிருக்கின்ற நெருக்கடி நிலைமை காரணமாக அரசுக்கும் ...

...க்குத் தீர்வு காண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மிடையில் பேச்சுக்கள் நடை பெற்ற...

## ஜனாதிபதியும் பிரதமரும் இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடி நிலைக்கும் அதிகார இழுபறிக்கும் தீர்வு காணும் நோக்கில், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் மீண்டும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறவுள்ள இச் சந்திப்பில் ... காப்பு அமைச்சை உருவாக்கி பகிர்வது குறித்து ஆராயப்படவுள்ளதாகத தெரியவருகிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சமாதானத்தைத் தொடருமாறு சர்வதேச அழுத்தம் அதிகரித்திருக்கின்ற நிலையில் இன்றைய சந்திப்பு மிக முககியத்துவம் வாய்ந்ததாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அமைச்சுக்களைப்

(நமது நிருபர்)

**நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடிக்கு,தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதன் மூலமோ, அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சை உருவாக்குவதன் மூலமோ எந்தவொரு தீர்வையும் ஏற்படுத்த முடியாது**

**இவ்வாறு நேற்று நடைபெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டில் அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம் பெற்றது. அதில் உரையாற்றும் போதே அமைச்சர் பீரிஸ் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்;

நாட்டின் அரசியல் சூழலில் உருவாகியிருக்கின்ற நெருக்கடி நிலைமை காரணமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கமிடையிலான சமாதான முயற்சிகளில் உறுதியற்றதோர் நிலைமை உருவாகியுள்ளது.

இந்நிலையில் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் தீர்க்கமான முடிபுகள் எதுவும்இதுவரை எட்டப்படவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)

# இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடி நிலைக்கும் அதிகார இழுபறிக்கும் தீர்வு காணும் நோக்கில், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் மீண்டும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறவுள்ள இச் சந்திப்பில், சமாதான முயற்சிகளை மீண்டும் தொடரும் வகையில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சை உருவாக்கி பகிர்வது குறித்து ஆராயப்படவுள்ளதாகத தெரியவருகிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சமாதானத்தைத் தொடருமாறு சர்வதேச அழுத்தம் அதிகரித்திருக்கின்ற நிலையில் இன்றைய சந்திப்பு மிக முககியத்துவம் வாய்ந்ததாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அமைச்சுக்களைப் பறித்தெடுத்ததால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, நாட்டின் அரசியல் ஸ்திரமற்றதன்மையை உரு

(10ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்றம் நீடிப்பு

# மூதூரில் கைக்குண்டு வீச்சு முஸ்லிம் இளைஞர் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசததில தொடரும் வன்முறைச் சம்பவங்களால் அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து நேற்று இரவு 8 மணிமுதல் இன்று அதிகாலை 5 மணிவரை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே தொடர்ந்து கொண்டிருக்கின்ற வன்முறைகளின் எதிரொலியாக நேற்றுப் பிற்பகல் 6.30 மணியளவில் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் மூதூர்ப் பகுதி பள்ளிவாசலடியில் ரஹீம்(வயது30) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அங்கு பெரும் பதற்றம் உருவாகியுள்ளது.சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டிருப்பதாக திருமலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை திருமலையில் இடம் பெற்றுவரும் வன்முறைக்கு முடிவுகட்டும் வகையில் நேற்று இரண்டாவது தடவையாக தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சந்திப்பு ஆலங்கேணிக்கும் இடிவன் கிராமத்துக்கும் இடைப்பட்ட சூனியப்பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இதில் 22-வது படைப் பிரிவின் கட்டளையதிகாரி சுசில் தென்னக்கோன், மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பில் வன்முறையைத் தவிர்க்கும் வகைகள் குறித்தும் பஸ் சேவை நிறுத்தப்பட்ட பகுதிகளில் மீண்டும் அதனை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இது இவ்வாறிருக்க திருமலையில் தொடரும் பதற்றத்தால் அங்கு பெரும் கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சத்துடனும் பீதியுடனும் மக்கள் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

(இ)

# அதி உயர் பாதுகாப்பு வலயத்தால் மனித உரிமை மீறப்பட்டுள்ளது!

## உயர் நீதிமன்றில் மாவை மனுத்தாக்கல்

(கிளிநொச்சி)

விசேட வர்த்தமானிய அறிவித்தல் மூலம் பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தை பிரகடனப்படுத்தாது அதன் அண்மிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை வெளியேற்றியமை தொடர்பாக மூன்று அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் கொழும்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட மூவர் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் தனது வீடு அமைந்துள்ளதால் தானும் தனது குடும்பத்தினரும் தமது சொந்த வீட்டில் வாழ முடியாதுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.இதனால் தமது அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாகவும் இதற்குத் தகுந்த நஷ்டஈடுபெற்றுத் தருமாறும் மாவை சேனாதிராசா உயர்நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

இதேவேளை மேற்படி மூவரும் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல், மனுவில்

(10ம் பக்கம் பார்க்க)

# இராணுவச் சிப்பாய் ஒருவர் புலிகளிடம் சரணடைந்தார்

(கிளிநொச்சி)

முகமாலைச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்தபடைச் சிப்பாய் ஒருவர் நேற்று மாலை விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளார். தனது சொந்த இடத்திற்கு செல்ல விரும்புவதாகவும்,

தனது பயணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் அவர் விடுதலைப் புலிகளிடம் கோரியுள்ளார்.

திருகோணமலை மங்கிபிறிஜ் பகுதியில் கடமையில் இருந்த பிரஸ்தாபச் சிப்பாய் படையில் இருந்து தப்பியோடி மறைந்து வாழ்ந்த போது கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு மீண்டும் இராணுவத்தில் இணைக்கப்பட்டு முகமாலைச் சோதனைச் சாவடியில் கடமைக்கு அமர்த்தப் பட்டார்.

இரத்தினபுரியைச் சேர்ந்த கே.எல்.சரத்குமார (வயது21) என்ற சிப்பாயே இவ்வாறு சரணடைந்தவராவார்.

இவர் நேற்றிரவு 8.30 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டார். இவரை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தெரிவித்துள்ளது.

(ந-5)

# இராணுவத்தினருடனான சந்திப்பை திணைக்களத் தலைவர்கள் பகிஷ்கரிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டு இராணுவ உயர்அதிகாரிகளுக்கும், திணைக்களத் தலைவர்களுக்குமிடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பை திணைக்களத் தலைவர்கள் பகிஷ்கரித்துள்ளனர்.

இச் சந்திப்பு நேற்றுக்காலை 10 மணியளவில்512-வது பிரிகேட் தலைமையகத்தில் நடைபெறவிருந்தது.இதேவேளை வடமாராட்சி கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் 524-வது பிரிகேட் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கேணல் ரத்திநாயக்கவுக்கும் இடையில் நேற்று நடைபெற இருந்த சந்திப்பையும் கடற் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் பகிஷ்கரித்துள்ளனர்.

இராணுவத் தலைமையகத்தினுள் இச்சந்திப்பு நடைபெறவிருந்ததினாலும் இராணுவதினருடனான சந்திப்புக்களின் போது முன்வைக்கப்படும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையினாலுமே இச்சந்திப்பை பகிஷ்கரித்ததாக மீனவர் சங்கப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.(ந-43)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 1இல் இருந்து 11வரை சகல பாடங்களும் மற்றும் SPOKEN ENGLISH, GRAMMAR மேற் படிப்புவரை எல்லா வகுப்புகளிலும் கூடியது 15மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். எல்லாப் பாடங் களிலும் தனித்தனிக்கவனம் கொடுக்கப்படும். 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: விக் னேஸ்வரன் ஆச்சாரி.

(7799)

## பதிவுகளை மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேச செயல கத்தினால் நடாத்தப்படும் தடகள குழு நிலை விளையாட்டுப்போட்டி களில் பங்கு பற்ற விரும்பும் கழகங் களில் இது வரை பதிவு செய்யப் படாத கழகங்களும் அங்கத்துவத் தைப் புதுப்பிக்க விரும்பும் கழகங் களும் தமது கழகப் பதிவுகளை இம் மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் வலி.வடக்குப் பிரதேச செயலகத் தில் மேற்கொள்ளலாமெனவும் இதற் குப் பின் கழகப் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (உ)

## இழுபறி நிலையில் பாதுகாப்பு அமைச்சு




## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும

(மயிலங்காடு)

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் எதிர் வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30க்கு ஞானாமிர்த மண் டபத்தில் அதிபர் அ.பேரம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திரு.திருமதி கிருபா சக்தி தர்மதாசன் பிரதம விருந்தி னர்களாகவும், சட்டத்தரணி பொ.சண் முகலிங்கம் கௌரவ விருந்தின ராகவும், வலிகாமம் கல்வி வலயக் கணக்காளர் ந.யோகேந்திரராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ.கு.நகு லேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளதுடன், நிறுவுநர் நினைவுரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவராசரத் தினம் வழங்கவுள்ளார்.

(தி-118)

## மலசல கூடம் அமைப்புக்கு சீமெந்து

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அராலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வான்மதி சனசமூக நிலையத்தின் ஊடாக அப்பகுதி மக்கள் மலசல கூடங்களை அமைப்பதற்கு வேண்டிய 500 பைக்கற் சீமெந்தினை இந்து கலாசார அமைச்சு அண்மையில் வழங்கியுள்ளது. (உ-70)

# புலம் பெயர்ந்த ஈழத் தமிழரைத் திருப்பியனுப்ப வேண்டாமென வெளிநாடுகளிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் இராணுவ உயா பாதுகாப்பு வலயங்கள் அகற்றப் பட்டு அப்பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்வு திரும்பும் வரை புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகுந் துள்ள தமிழர்களைத் தாயகத்திற் குத் திருப்பி அனுப்பவேண்டாம் என புனர்வாழ்வு அலுவலகம் வெளிநாடு களிடம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

இதுதொடர்பாக, யாழ். செயல கத்தில் இயங்கும் புனர்வாழ்வுக் கிளை அலுவலகம் வெளிநாடு களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ,

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்று வெளி நாடு களில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் மக்களை, இங்குள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங் கள் அப்புறப்படுத்தப்பட்டு இயல்பு நிலை திரும்புவதற்கு முன்னர் தாய கத்திற்குத் திருப்பி அனுப்ப வேண் டாம்.

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக் குடியேறுவதற்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலய நடைமுறைகளும், இராணுவ நெருக்குவாரங்களும் தடையாகவுள்ளன.

இந்நெருக்குவாரங்கள் அர சாங்கத்திற்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னரும் தொடர்கதையாவுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து குடா நாட்டு நிலைமைகளைப் பார்வை யிடுவதற்காக வருகின்ற ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிகளும் தத்தமது நாடுகளிலுள்ள, குடாநாட்டு பிரஜை களைத திருப்பி அனுப்புமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மேலும் யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங் கள் நீக்கப்பட்டு இங்குள்ள மக்களின் இயல்பு வாழ்வு திரும்பும் வரை வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ மக்களைத் திருப்பி அனுப்ப வேண் டாம் என தெரிவிக்கிறோம் எனக் குறிபபிடப்பட்டுள்ளது.

ஜேர்மனி,பிரான்ஸ், லண்டன், கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளுக்கு இக்கடிதம் அனுப்பி வைத்துள்ள தாக மேற்படி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-43)

## தென்னாபிரிக்காவில் தமிழுக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் அதிகளவு தமிழ் மக்கள் வாழ்ந்துவரும்நிலை யில் தற்போது தமிழ் மொழிக்கு அங்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள் ளது. தென்னாபிரிக்காவில் சுமார் 12 இலட்சம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் அரை வாசிக்கும் அதிகமான எண்ணிக் கையில் தமிழர்கள் வாழ்ந்து வரு கின்றனர்.

இந்நிலையில் உள்நாட்டு மொழி களாக முன்னர் இருந்து வந்த மொழிகளுடன் தற்போது தமிழ், இந்தி, தெலுங்கு, உருது மற்றும் குஜராத்தி ஆகிய ஐந்து மொழிக ளுக்கும் தென்னாபிரிக்க அரசாங் கம் அங்கீகாரம் அளித்துள்ளது.

இதன் மூலம் அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகள் பாடசாலைகளில் மெட்ரிக் வகுப்பு வரை தமது தாய் மொழி யான தமிழில் கல்வி கற்க முடியு மெனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-18)

# தற்போதைய நெருக்கடி நிலைக்கான பொறுப்பை ஜே.வி.பி.ஏற்கவேண்டும்

## ஐ.தே.க.ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் காவுக்கு அழுத்தம் கொடுத்து, பாது காப்பு அமைச்சு உட்பட 3முக்கிய அமைச்சுக்களைப் பறித்தெடுப்பதற் குத் தேவையான பின்னணிகளை உருவாக்கிய மக்கள் விடுதலை முன் னணி தலைமையிலான அரசியல் கட்சிகள், தற்போது சமாதான முயற் சிகளையும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கி இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக குற்றம் சாட்டி அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில, மக்கள் விடுதலை முன்னணியால் உருவாக் கப்பட்டுள்ள இந்தப் பின்னணியில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை இந்த அர சியல் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கியதேசிய முன்னணி அர சாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த காலங்களில் நடைபெற்றுவந்த சமா தானப் பேச்சுவார்த்தைகளை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக நாடுமுழுவதும் ஒளிபரப்பியமைக்கு எதிரான ஆர்ப் பாட்டங்களை நடத்திய மக்கள் விடுதலை முன்னணி,

ஜனாதிபதி ஊடகத்துறை அமைச் சைப் பொறுப்பேற்றதன் பின்னர், கடந்த மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர்தின உரையை இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் ஊடாக முழு உலகிற்கும் ஒளிபரப்பியபோது மௌனம் சாதித் தது ஏன்? என கேள்வி எழுப்பியுள் ளார்.

இதேவேளை, கடந்த 2000ஆம் ஆண்டு ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்த போது அதற்கும் எதிர்ப்புத் தெரி வித்த ஜே.வி.பி.கடந்த மாதம் 16 நாள் கள் பாராளுமன்றம் அவரால் ஒத்தி வைக்கப்பட்டமை குறித்து நியாயம் கற்பித்து வருவது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அத்துடன், யாழ்.கட்டளை இடும் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றம் செய்வதற்கு அன்று எதிர்ப்புத் தெரிவித்த சிஹல உறுமய, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்று 7நாள் களுக்குள் மேற்படி கட்டளைத் தளபதியை இடமாற்றியது குறித்து மௌனம்சாதித்து வருகிறது என வும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## சமாதான நீதிவான்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த செல்லர் கந்தசாமி யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன் னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் 1970-ம் ஆண்டில் இருந்து பல பொது அமைப்புக்களில் முக்கிய பதவி வகித்து சமூக சேவையாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

## யார் இந்த மீனா?

அநீதிக்கெதிராக மீனா நடத்தும் போராட்டத்தில் இணையுங்கள். பிரச்சினைகளைத் தீரத்ததுடன் தீர்த்துவைப்பதைப் பார்த்து அவளைப் பாராட்டுங்கள். மிது எனும் கிளிப் பிள்ளையின் கோணங்கி விளையாட்டுக்களைப் பார்த்து அவளோடு நீங்களும் சிரியுங்கள். அவளின் வெற்றிகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

திரையில்

முற்றிலும் காட்டூன் படங்கள்
இசை, விசேட ஒலிக் குறிப்புகளுடன்
தமிழ், சிங்கள, ஆங்கில
உரையாடல்களுடன் வீடியோ
படமாக வழங்கப்படுகிறது.



பள்ளி செல்ல வேண்டுமென்னும் மீனாவின் கனவு நனவாவதை நாளைய வலம்புரியில்...

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:–
அறை எண் - 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef (C/6946)

## மனித உரிமைகள் தின வினாடி வினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினத்தை யொட்டி மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத் தில் இன்று காலை 9.15 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டி இடம் பெற வுள்ளது.

கு.குருபரன் (யாழ்.இந்துக் கல் லூரி), இ.உமா(வட.இந்து மகளிர் கல்லூரி), ஜே.கல்யாணி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பு.வாசுகி (வட இந்து மகளிர் கல்லூரி), ச.லாவ ணியா(வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), தி.எனோதராணி(நெல்லி யடி ம.ம.வி), க.பிரகாஷ் (சாவகச் சேரி இந்துக் கல்லூரி), கு.அபிமா றன் (உடுப்பிட்டி அ.மி.த.க.பாட்சாலை), சி.பரதன் (சாவகச்சேரி இந்துக் கல் லூரி), வி.பிரியா (யூனியன் கல் லூரி) ஜே.அமிர்தாப் (கனகரத்தினம் ம.ம.வி) ஜி.ஏ.அருள் பிரதீபன் (ஊர் காவற்துறை சென்.அன்ரனீஸ் கல் லூரி) ஆகியோர் மேற்படி போட் டிக்குத் தெரிவாகியுள்ளனர். (உ)

## இன்று ஒரு தகவல்

# அனுசரித்துப் போவது எப்படி?

சிலரைப் பற்றி இப்படிக் கூறுவதுண்டு! ''அடுத்தவர்களை அனுசரித்துப் போவதில்லை. அவன் என்ன சார் மனிதன்? என்பார்கள். சக மனிதர்களுடன் எப்படிப்பழகுவதென்று தெரியாததனால் பலர் இன்று சங்கடப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வசதி வாய்ப்புக்கள் எல்லாம் சரியாகவே இருக்கும். ஆனால் வாழ்க்கை சரியாக இருக்காது. அடுத்தவரிடம் எப்படிப் பேசுவது...பழகுவது என்பது தெரியாததனால் தான் இந்த அவஸ்தை.

சரி...இந்த அவஸ்தை இல்லாமல் வாழ்வது எப்படி? இதற்கு அனுபவசாலிகள் சில வழிமுறைகளைக் கூறுகின்றனர்.அவற்றைப் பற்றி இப்போது அறிந்து கொள்வோம்.

முதலில் நமது நாக்கு நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.வார்த்தைகளைக் கொட்டிவிட்டு அதன் பின்பு அள்ள முடியாமல் சிரமப்படக் கூடாது. எப்படிப் பேசுகின்றோம் என்பது முக்கியம்.பேசும் போது எப்படி முகத்தை வைத்திருக்கின்றோம் என்பதும் முக்கியம். அன்பாகப் பேசினாலும் நன்றாக இருக்கும்.அப்படிப் பேசும்போது ஆதரவாக அவரது தோள்மீது ஒரு கையைப் போட்டுப் பேசுவது இன்னும் நன்றாக இருக்கும்.

இரண்டாவது விஷயம்.இன்னொருத்தரிடம் பேசும் போது வாக்குறுதிகளை அள்ளிவீசக் கூடாது.கொடுக்கின்ற வாக்குறுதி குறைவாக இருக்க வேண்டும்.அப்படிக் கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருவரைப் பாராட்டுகின்றோம்.அல்லது அவரைப்பற்றி அபிப்பிராயம் கூறுகின்றோம் என்றால் அது ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும்.நமது பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவரது முன்னேற்றத்துக்கு உதவுவது போல் இருக்கவேண்டும். நாம் கூறுவதைக் கேட்டுவிட்டு அவர் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடக்கூடாது.

எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும்.முக மலர்வுடன் இருக்க வேண்டும்.மனிதன் என்று இருந்தால் வருத்தம், கவலை, ஏமாற்றம் இவை எல்லாம் இருக்கத்தான் செய்யும். அவை மனதில் இருக்கட்டும். அந்த வருத்தமும் கவலையும் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு நமது முகத்தில் உள்ள மலர்ச்சியை மூடிமறைக்க நாம் இடம் கொடுக்கக் கூடாது.

எந்த விஷயத்தைப் பற்றி யாரிடமும் பேசினாலும் வெளிப்படையாகப் பேசவேண்டும். திறந்த மனதுடன் பேச வேண்டும்.மூடிமறைத்து மென்று விழுங்கிக் கொண்டிருக்கக் கூடாது. இன்னொருவரிடம் பேசும்போது விவாதம் செய்யுங்கள் ஆனால் வாதாடிக் கொண்டிருக்காதீர்கள்.

நம்மிடம் இருக்கும்நல்ல குணங்களை நாம் எடுத்துக் கூறிக் கொண்டிருக்கக் கூடாது. அந்த நல்ல குணங்களே நம்மைப் பற்றி எடுத்துக் கூறவேண்டும். அது போன்று நடந்து கொள்ள வேணடும். அது போல் அடுத்தவர்களிடம் உள்ள தீய குணங்களைப் பற்றி அவசியமில்லாமல் நாம் பேசவேண்டியதில்லை.

உங்களைப் பற்றி யாராவது தவறாகப் பேசுகின்றனரா? அப்படி அவர்கள் பேசுவது உண்மை இல்லையா? அப்படி என்றால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். நாலைந்து பேருடன் பேசிக்கொண்டிருக்கும் போது எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். யாரையும் அலட்சியப் படுத்தாதீர்கள். நகைச்சுவையாகப் பேசலாம். ஆனால் நமது நகைசசுவை அடுத்தவர்களை கேலி செய்வதாக இருக்கக்கூடாது.

நமக்குக் கிடைக்கவேண்டியன கிடைக்கவில்லையே என்ற தவிப்பு இருக்கக் கூடாது. உங்களது செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும். பாராட்டுத் தானாகத் தேடி வரும். இன்னொரு மனிதனுடைய மனதில் கௌரவமான ஒரு இடத்தைப் பிடிக்கவேண்டுமென்றால் நாம் இந்தக் குணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இதெல்லாம் அனுபவசாலிகள் கூறியவிடயங்கள். இந்த விடயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். அதுதான் முக்கியம். தவறாகப் புரிந்து கொண்டால் என்ன ஆகும் தெரியுமா?

ஒருவர் வந்தார் ''சார்! அடுத்தவர்கள் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு அன்பாகப் பேச வேண்டும் என்று கூறினீர்கள். அப்படித்தான் பேசினேன் அவரது முதுகைத் தட்டிக்கொடுத்தேன். எனது வேலை போய்விட்டது சார்'' என்றார். ''யாரிடம் அப்படிப் பேசினீர்கள்? '' என்றேன். ''எனது முதலாளியிடம் சார் '' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கை – தென்னாபிரிக்கா கூட்டு உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் உடன்படிக்கை ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வுடன்படிக்கையில், தற்போது தென்னாபிரிக்காவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஹொசானாலாமினி குமாரவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ்வுடன்படிக்கை மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார உறவுகள் சீராக்கப்படும்.

அத்துடன் இவ்வுடன்படிக்கை மூலம் தனியார் துறைசார் முன் முயற்சிகளையும் கூட்டுத்தொழில் முயற்சிகளையும் மேற்கொள்ள வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி-61)

# விவசாயம் பற்றிய ஆய்வுகளால் யாழ் குடாநாட்டில் எந்தப்பயனுமில்லை

## பொறியியலாளர் பொ. விக்கினேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி ஆராய்கின்ற விஞ்ஞானிகளும ஆய்வாளர்களும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைப்பதில்லை.

அத்துடன், விவசாய நடவடிக்கைகளை நவீனப்படுத்துவது பற்றிய அறிவை புகட்டுவதில்லை. இதன காரணமாக விவசாயம் தொடர்பான ஆயவுகள் பயனற்றுப் போகின்ற தன்மையே யாழ். குடா நாட்டில் காணப்படுகின்றது.

இவ்வாறு கடந்த திங்களன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமான வடக்கு-கிழககுச சுற்றுச் சூழல் பற்றிய நான்கு நாள் சர்வதேச கருத்தரங்கின் இரணடாம் நாள் மாலை அமர்வில் கலந்து கொண்டு கருத்துரையாற்றிய யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதியும் பொறியியலாளருமான பொ விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

கலாநிதி ஏ.கந்தையா தலைமையில் இடம்பெற்ற இவ் அமர்வில் தொடர்ந்தும் கருததுக்கூறிய பொ.விக்கினேஸ்வரன,

யுத்தம் காரணமாக யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர் கொண்ட பிரச்சினைகள், கஷ்டங்கள் ஏராளம். இவர்களது பிரச்சினைகள், நெருக்கடிகள் பற்றி அடிக்கடி பேசப்பட்டாலும் அவை தீரவில்லை.

விவசாயிகள் தமது உற்பத்திகளைப் பெருக்க,செயற்கைப் பசளைகளையும் கிருமிநாசினிகளையும் பாவிக்கவேண்டும் என 60 வருடங்களுக்கு முன்னர் கூறிய விவசாயிகள், இன்று இவற்றைப்பாவிக்க வேண்டாம் எனக்கூறுவதுடன், இவற்றினால் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுவது உட்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

இவர்களின் ஆலோசனைகளால் எந்தப்பயனும்ஏற்படடதாக இல்லை.

இன்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாயின் பெரும் மூலதனம் தேவையாக உள்ளது. வன்னியில் இருந்து எடுத்துவரப்படும் ஒரு லோட் எரு,35ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் மண் பரிசோதனை செய்யப்படவேண்டும் என 10 வருடங்களுக்கு முன்பிருந்தே விவசாயிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் குரல் கொடுத்து வருகின்ற போதும் அது அமுல்படுத்தப்படவில்லை.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நீர்பாவனை அதி உச்சமாகவுள்ளது. இதனைக்கட்டுப்படுத்தி நீரைச் சேகரிக்க உரிய நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்துவது அவசர பணியாகவுள்ளது என்று குறிபபிட்டார். (உ-16)

# இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இரு தலைவர்களுக்கும் அக்கறையில்லை

## பா.உ.இரா.சம்பந்தன் சபையில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த இரு தசாப்த கால இனப் பிரச்சினைத்தீர்வினை நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கியதேசிய முன்னணி கட்சிகளினாலும் தீர்த்து வைக்க முடியாது. போயுள்ளமை கவலை தரும் விடயமாக அமைந்துள்ளது.

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் இவ்வினப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கும்போதெல்லாம் தென்னிலங்கையில் உள்ள சில அரசியல் கட்சிகள் அதனைக் குழப்ப முயற்சி செய்கின்றன. மாறாக தமிழழ விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணப்பிரச்சினை தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நாட்டின் அரசியல் சட்டத்தில் விரைவில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும்.இச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படாவிடின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலான முரண்பாடுகள் குறித்தும்,கட்சிகளுக்கிடையிலான போட்டிகள் குறித்துமே பேச்சுவார்த்தைகள் நடாத்தி வருகின்றனர்.இருவரும் நல்லிணக்குழு மூலம் சமாதானம தொடர்பான பேச்சுக்களில் அக்கறை காட்டவில்லை என அவர் மேலும தெரிவித்தார். (தி-61)

## இராசி பலன்

**05. 12. 2003**
**(கார்த்திகை 19, வெள்ளி)**
**துவாதசி மு.இ - 8.10 வரை**
**அச்சுவினி மு.இ -9.01 வரை**
**இராகுகாலம் 10.46 - 12.16**
**சுபநேரம் 6.16 -07.46**

**அமிர்தசித்தம்**

**மேடம்**
ஜனவசியம், எடுத்த காரியம் கைகூடும், தெளிந்த சிந்தை, தனவரவு.

**இடபம்**
கோபப்படுதல், ஆரோக்கியக் குறைவு, சுபசெலவு, காரிய தாமதம்.

**மிதுனம்**
தெய்வசிந்தை, முயற்சி கைகூடும், நல்ல வரவேற்பு, வருமானம்.

**கடகம்**
பிறர் உதவி, நல்ல செய்தி, காரிய அனுகூலம், செய்தொழில் விருத்தி.

**சிங்கம்**
புதிய திட்டமிடல், உறவினர் சந்திப்பு, சிந்தனை மிகுதி, இடமாற்றம்.

**கன்னி**
காரிய தடங்கல், நணபர் விரோதம், உடல் நலக் குறைவு, போசன சுகம்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப நலன், நல்ல வரவேற்பு, தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
உடல்நலம், காரிய சித்தி, உற்சாகம், நிலைமாற்றம்.

**தனுசு**
அமைதிக் குறைவு தெய்வசிந்தை, வியாபார நன்மை, வேலையில் ஆர்வம்.

**மகரம்**
மாதா சுகம், உடல் நலக்குறைவு, பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம்.

**கும்பம்**
கூட்டு முயற்சி, எடுத்த காரியம் கைகூடும், உடல் நலம், நணபர் சேர்க்கை.

**மீனம்**
அதிக வார்த்தை, காரிய தாமதம், பொருள் விரயம், கோபப்படுதல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப பட்டது) - **வள்ளவன்.**

# மட்கல நிலையத்தில் மண் உருவ வடிவமைப்புப் பயிற்சி

(தொல்புரம்)

வடக்கு-கிழக்கு மாகாண தொழில் துறை திணைக்களத்தினால், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மட்கல நிலையத்தில், அச்சுக்கள் மூலம் மண்ணினால் உருவங்களை வடிவமைக்கும் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வர்ணம் தீட்டுவதில் அனுபவம் உடையவர்கள் உட்பட இப் பயிற்சியைப் பயில விரும்புவர்கள் மேற்படி நிலையத்தற்கு நேரில் சமுகமளித்து பதிவுகளைச் செய்யுமாறு சங்கானைப் பிரதேச செயலர் சி.எ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

இப் பயிற்சிக் காலத்தின் போது, நாள் ஒன்றுக்கு 50 ரூபா ஊக்குவிப்பு படியாக வழங்கப்படவுள்ளது.(உ-70)

# வீதி திருத்தப் பணிகளுக்கு இவ்வாண்டு ஒரு கோடி 40 இலட்சம் ரூபா செலவு

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் இவ்வாண்டில் 1 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி செலவில் வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ்.பி. சிவநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு, மீள்குடியேற்ற அமைச்சு வழங்கிய மேற்படி நிதியைப் பயன்படுத்தி யாழ். குடாநாட்டிலுள்ள முக்கிய பல வீதிகள் புனரமைப்புச் செயயப்பட்ட போதிலும், நிதிப்பற்றாக்குறை காரணமாக இன்னும் பல வீதிகள் புனரமைப்புச செய்ய முடியாத நிலையில் உள்ளன.

வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளிலுள்ள மிகவும் அவசியமான வீதிகள் தற்போது புனரமைப்புச் செய்யப்படுள்ளன. ஏனைய பகுதிகளிலுள்ள வீதிகள் அனைத்தும் அடுத்த ஆண்டில் புனரமைப்புச் செயயப்படவுள்ளன என எஸ்.பி. சிவநேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் உள்ள வீதிகள் திருத்தம் செய்யப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் பலத்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-43)

# மீனவர்களின் அத்துமீறல்குறித்த கலந்துரையாடல்

(தொல்புரம்)

சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கடற்பரப்பில் குருநகர் மீனவர்களது அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் மற்றும் கடற்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-70)

சிவகாம சுந்தரி எனது மனைவி. இன்று காலையில் தான் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் சேர்த்திருந்தேன். இது கொஞ்சம் சிக்கலான பிரசவம் என்று வைத்தியர் கூறியிருந்தார். தலைப் பிரசவம் என்பது ஒரு பெண்ணுக்கு மறு ஜென்மம் எடுத்தது மாதிரி. சிலருக்குப் பிள்ளை பெறுவது என்பது காய்ச்சலுக்கு மருந்தெடுத்தது மாதிரி. முதல்நாள் வைத்தியசாலைக்குப் போவார்கள். அடுத்தநாள் குழந்தையோடு வீட்டுக்கு வந்துவிடுவார்கள். வருஷத்திற்கு ஒரு குழந்தை தாய்க்கும் ஒரு நோய்நொடி இல்லை. குழந்தைக்கும் நோய்நொடி இல்லை. எனது அம்மாவைப் பார்த்தேன். எந்தவித கலக்கமும் இன்றி வெகு இயல்பாக இருந்தாள். குடும்பத் திட்டமிடல் பற்றி பிரசாரம் செய்வதற்கு எங்கள் அம்மா அப்பாவை விட்டால் வேறு யாரையுமே கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவு சிறிய குடும்பம் எங்கள் குடும்பம். ஆக ஏழு ஆண் பிள்ளைகள், நான்கு பெண பிள்ளைகள். அவ்வளவு தான்.

நாட்டின் ஒரு பகுதியில் கடும் வரட்சி. மக்களுக்குக் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடையாது. இன்னொரு பகுதியில் தொடர்ந்து மழை வெள்ளம். பயிர் எல்லாம் அழிகின்றது. ஏன்

வார்கள். எனது தம்பி ரஞ்சனுக்கு அடிக்கடி போகவேண்டும். இவன் எப்படி இரண்டாம்தரம் போகமுடியும் என்று எனது தங்கைகள் சண்டைக்கு வந்து விடுவார்கள். பொம்பிளைப் பிள்ளைகளோட சண்டைக்குப் போகாதையுங்கோ மோனை! என்று அம்மா தொண்டை கிழியக் கத்துவார். இதற்குக் கூட 78ஆம் ஆண்டுக்கு முன் பாணுக்கு வரிசையில் நின்றது போல் வரிசையில் நிற்கவேண்டியதுதான். ஆனாலும், எனது மூன்றாவது தம்பி ஜெயராமுக்கு ராஜமரியாதை. ஜெயராமுக்கு எதையுமே அடக்கத் தெரியாது. அவனைத் தடுத்தால் அவன் சத்தம் போட்டு ஊரையே கூட்டிவிடுவான் அல்லது காற்சட்டையுடன் அசிங்கம் பண்ணிவிடுவான். அதனால் அவனை மட்டும் 'நீ போ ராசா' என்று அனுப்பிவிடுவோம். எங்கள் அப்பாவும் 'இலங்கை இனப் பிரச்சினை வெகு விரைவில் தீர்க்கப்படும்' என்று அரசாங்கங்கள் கூறுவது போல ''இன்னொன்று கட்டத்தான் வேணும்' என்று சொல்லிக் கொள்வாரே தவிர கட்டமாட்டார்.

'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்று ஒரு பழமொழி உண்டு. ஒரு அரசாங்கம எவ்வாறு [illegible]

கும். 'ஆனால் உங்கள் வீட்டில் தினமும் பந்திதான்' என்று எனது நண்பர்கள் கிண்டல் செய்வார்கள். உண்மைதான் தினமும் மூன்று வேளையும் சாபபாடு கொடுத்து முடிக்கவே அம்மாவுக்கு உயிர் போய் விடும். எனது அண்ணா ஒரு கொதிக் கோழி.தனது தட்டை யாராவது எடுத்தால தட்டாலேயே அடிப்பான். அதே போல் தங்கை. அவளும் ஒரு சுடு தண்ணிப் பைப்பு. எனது தம்பி ரூபன் அவனுக்கு நாங்கள் 'டைனோசர்' என்று பெயர் வைத்தோம். அவனுக்குச் சாப்பாடு போட்டு அண்டாது. மற்றவர்கள் 5 அப்பம் சாப்பிட்டால் அவனுக்குப் 15 வேணும். அடுத்தவன் ஜெயராம் சாப்பிடும்போது யாருமே கூப்பிடக்கூடாது. யாராவது கூப்பிட்டால் உடனே சறுவான். அவனை நாங்கள் 'அனக்கொண்டா' என்று கூப்பிடுவோம். கடைக்குட்டி செல்லம் அவன் எல்லோரிடமும் கைநீட்டி வாங்கிச் சாப்பிடுவான். இப்படி ஒரு கூட்டத்திற்குச் சாப்பாடு கொடுத்துப் பள்ளிக்கூடம் அனுப்புவது என்பது எவ்வளவு கொடுமை. அமமா பாவம். கடைசி நூறு இடியப்பம் என்றாலும் பிழிய வேண்டும். கைவிட்டுப்போம். ஒரு உற்பத்தி முடிந்து இப்போ என்னொரு உற்பத்தியில் ஈடுபடவேண்டியிருந்தது.

எங்கள் தோட்டத்துக் காய்கறிகளையும் எப்போதாவது நாட்டில் மீன் மலிந்தால் அதனையும் வாங்கிச் சாப்பிடுவோம். அதன்பிறகு நான் கொஞ்சம் வளர்ந்த பின்னர் எனது நண்பர்கள் வீட்டுத் திருமணங்களுக்கெல்லாம் போவேன். அப்போதெல்லாம் எனது தம்பிமார் ஆசையோடு என்னைப் பார்ப்பார்கள். பாவம்! எங்கள் சித்தப்பா மன்னாரில் சேவை செய்கின்றார். அவருக்குக் குழந்தையில்லை. 'எங்களில் யாராவது ஒருவரை அங்கு அனுப்பினால் அவர் பார்த்துக்கொள்வார் தானே!' என்று சிலர் யோசனை கூறினார்கள். ஆனால், அப்பா மறுத்துவிட்டார். 'எவ்வளவு சிரமப் பட்டாவது எங்கள் பிள்ளைகளை நாங்கள் தான் வளர்க்கவேண்டும். ஒரு பிள்ளை தரக்கூடிய தொல்லைகள், செய்கின்ற தப்புக்களை எல்லாம் பெற்றவர்கள தான் தாங்கிக்கொள்ள வேண்டும். மற்றவர் மீது இந்தச் சுமைகளைச் சுமத்திவிட்டு நாங்கள் தப்பிச்சுக்கொள்ளக் கூடாது' என்று அப்பா கூறிவிட்டார்.

ஒருவனுடைய பண்பாட்டு உணர்ச்சி என்பது திடீரென்று வந்து புகுந்து கொள்வதில்லை. அது நிலாக் காட்டி சோறு ஊட்டிய காலத்தில் இருந்தே கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்திருக்க வேண்டும். நல்ல எண்ணங்களைச்

## வெள்ளி முற்றம்

ளர் ஜெயகாந்தன் கூறுகின்றார் ''தவறுகள் மன்னிக்கப்படலாம் குற்றங்கள் தான் தண்டிக்கப்படவேண்டும். தவறுகள் குற்றங்கள் அல்ல''

அநேகமான உண்மைகளை நாம் தாமதமாகத்தான் தெரிந்து கொள்கின்றோம். இதை யாராலும் தவிர்கக முடிவதில்லை. சரி இரண்டு பிள்ளை வேண்டாம். ஒரு நான்கு பிள்ளைகளுடனாவது நிறுத்திக்கொள்ளலாமே. 'நிறையப் பிள்ளைகள் இருந்தால் வீடு கலகலப்பாய் இருக்கும்' என்று சிலர் கூறுகின்றார்கள். எப்பொழுதுமே ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. இவர்கள் ஒரு பக்கத்தை மட்டும்தான் பார்க்கின்றார்கள். தீபாவளி, வருடப்பிறப்பு வருகிறதென்றால் அப்பா யோசிக்கத்தொடங்கி விடுவார். நான்கு பெண் பிள்ளைகளுக்கும் உடுப்பு எடுக்கவே மூவாயிரம் ரூபா வேண்டும். மிகுதி ஏழு ஆண்பிள்ளைகள்...? இதில் அடுத்த பிரச்சினை 'எனக்கு நல்லது எனக்கு க

# எங்கள் குடும்பம் பெரிது!

இந்த நிலைமை. இந்த மழையில் கொஞ்சம் வரண்ட பகுதியில் பெய்யலாம. அந்த வெயில் கொஞ்சம் இந்தப் பகுதியில் எறிக்கலாம். கடவுளுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை? எதிலுமே முரண்பாடுகள். இந்த முரண்பாடுகளினால் தான் உலகம் இயங்குகின்றது போலும். எதிலுமே ஒரு சமநிலையைப் பேண முடியாமல் இருக்கின்றது. ஆணோ, பெண்ணோ ஒரு குழந்தைகூட இல்லையே என்று எத்தனையோ தம்பதிகள் ஏங்கிக்கொண்டிருக்க வேறு சில தம்பதியினருக்குப் பிள்ளைகள் தொடர்ந்தும் பிறந்தவண்ணமே இருக்கின்றது.

எங்கள் குடும்பத்தில் நான் இரண்டாவது ஆண் பிள்ளை. எனக்குக் கீழே 5 தம்பிகளும், நான்கு தங்கைகளும் உண்டு. எங்கள் அப்பாவே சில வேளைகளில் எங்கள் பெயரை மறந்துபோன சந்தர்ப்பங்களும் உண்டு. அம்மா மூத்த மகனைத் தம்பி என்றும், மகளைப் பிள்ளை என்றும் அழைப்பாள். மற்றவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவாள். சச்சின் டெண்டுல்கரை ரண் மெசின் என்று அழைப்பார்களே, அதைப்போலத்தான் எனது அம்மாவும் ஒரு பிள்ளை பெறும் இயந்திரமாகத்தான் இருந்தாள். எனக்கு இப்போது வயது 30. எனது கடைசித் தம்பிக்கு வயது 12. எப்படியும் 3 வருடத்திற்கு இரண்டு பிள்ளை வீதம் பெற்று இருக்கிறார்கள். எங்கள் குடும்பம் மட்டும் அமெரிக்காவிலோ, ரஷ்யாவிலோ இருந்திருந்தால் அரசாங்க அபார்ட்டே கிடைத்திருக்கும். ஆனாலும், ஒரு குசேலரின் நிலை மட்டும் எங்களுக்கு வரவேயில்லை. அப்பா குழந்தை உற்பத்தியை மட்டும் பெருக்கவில்லை. வெங்காயம், உருழைக்கிழங்கு என்று விவசாய உற்பத்திகளையும் பெருக்கிக்கொண்டு இருந்தபடியால் மற்றவர்களிடம் கையேந்தாமல் சீவித்துக்கொண்டோம்.

எங்கள் வீடு தினமும் வியட்நாம் வீடுதான். எங்கள் அதிகாலைகள் தினமும் குருசேஷ்திரம்தான். காலையில் நித்திரையால் எழும்புவதற்கு சண்டை, முகம் கழுவுவதற்குச் சண்டை, குளிப்பதற்கு, தேனீர் குடிப்பதற்குச் சண்டை, அப்பப்பா எங்கள் அக்கம் பக்கத்திலை உள்ளவர்கள் எல்லாம் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. சிலவேளைகளில் அவர்கள் தான் எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். எங்கள் பாட்டியும் அம்மாவும் தான் எங்களோடு சேர்ந்து போராடுவார்கள். உண்மையிலே 14 பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு மலசலகூடம் எப்படிப் போதும்?

காலையிலே அங்கேதான் சண்டைகள் தொடங்கும். உள்ளே போனால் ஒரு இரண்டு நிமிடம் நிம்மதியாய் இருக்கமுடியாது. தட்டித் தட்டியே கதவை உடைத்து விடு

அதைப்போலத் தான் குடிகளினதும் திட்டமிடல் இருக்கும். சனத் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த அரசினால் மேற்கொள்ளப் படுகின்ற பிரசாரங்கள் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எப்பொழுதுமே கிராமங்களைச் சென்றடைவதில்லை. கல்வி அறிவு குறைந்த பாமர மக்களிடையே குடும்பக் கட்டுப்பாடு பற்றிய தெளிவு இல்லை. மலையகம் போன்ற சில பகுதிகளில் மட்டும் அரசாங்கம் திட்டமிட்டு சில ஆரோக்கியமான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளுக்கு முரணாக சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இது குடுமபக் கட்டுப்பாடல்ல, இன ஒதுக்கல். எங்கள் அப்பாவிடம் சிலர் கேட்பார்களாம் ''என்னப்பா வருஷத்திற்கு ஒரு பிள்ளை பெற்றுக் கொண்டு போறியே?' என்று.அதற்கு அப்பாவும் 'என்ர கையில என்னப்பா இருக்கு எல்லாம் ஆண்டவன் செயல் என்று மேலே கையைத் தூக்குவாராம். என்ன கடவுளா பிள்ளை கொடுத்துக்கொண்டு இருக்கிறார். அதிகம் பிள்ளைகள் இருந்தால் அவர்களின் தேவைகளைக் கவனிப்பது சிரமம். அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது சிரமம். சரியான கண்காணிப்பு இல்லாவிட்டால் தவறான பாதையில் அவர்கள் போய் விடக்கூடும். ஒருமுறை நல்லூர்த் திருவிழாவுக்குச் சென்று வந்தோம். தற்செயலாக அம்மா கவனித்தபோது, எங்களின் நான்காவது தம்பி சிவாவைக் காணவில்லை. அந்த இரவில் மண்டும் கார் பிடித்துக்கொண்டு நலலூர் போய் ஐஸ்பழக் கடை ஒன்றில் இருந்து அவனைக் கூட்டிவந்தார் அப்பா!.

'எங்கள் வீடுகளில் தினம திதி என்று வந்தால் தான் பந்தி நடக்



இப்படி 11 பிள்ளைகள் பெற்று வளர்த்ததற்காக அவளுக்குத் தேசிய விருது கூடக் கொடுக்கலாம்.

நாங்கள் விளையாடப் போனாலும் கூட ஓர் அணியாகத்தான் நிற்போம். ஊரில் உள்ள சிறுவர்கள் எல்லாம் ஒரு அணியாக நிற்க, நாங்கள் அதற்கு எதிரணியாக நிற்போம். எனது கடைசித் தம்பி வவாவுக்குத் தான் ஏதோ சுனில் ஹவாஸ்கர் என்ற நினைப்பு. ஒருநாள் நாங்கள் கிரிக்கெற விளையாடிக்கொண்டு இருக்கும்போது பந்தை அடிப்பதற்கு அவன் மட்டையை முக்கி ஓங்கிய போது காற்சட்டை கழன்று விழுந்துவிட்டது. அன்றுமுதல் அவன் மைதானப் பக்கமே வருவதில்லை. எங்கள் குடும்ப அணியுடன் யாரும் மோதுவதில்லை. காரணம் பயம். இந்த விடயத்தில் மட்டும் நாங்கள் துரியோதனராக இருந்துவிட்டோம்.

சில கணித மேதாகிகளுக்கு மற்றவர்களைச் சீண்டிப் பார்ப்பதில் ஒரு சந்தோசம். ''விசரன், பேராசைக்காரன்'' என்று நேரடியாகத் தாக்குவது. ஒருமுறை ஒருவரோடு ஒருவர் பேசாமலே விட்டுவிடுதல் அதாவது உதாசீனப்படுத்தல் என்பது. இன்னொரு முறை நாங்கள் எல்லோரும் சிறுவயதில் ஒரு திருமணத்திற்குப் போயிருந்தோம். அங்கே ஒருவர் எங்கள் அப்பாவைப் பார்த்து 'உங்களுக்குக் கல்யாணத்திற்குச் சொன்னால், ஊருக்கே சொன்ன மாதிரித்தானே' என்று கேலிசெய்ய... அன்றிலிருந்து அப்பா அம்மாவுடன் யாராவது ஒருவர் தான் போவார்கள். அநேகமாக அந்தப் பாக்கியம் எங்கள் கடைசித் தம்பிக்குத் தான் கிடைத்தது. நாங்கள் கலியாணச் சாப்பாடு சாப்பிட்டதில்லை.

சொல்லி வளர்க்க வேண்டும். எங்களுக்கு யார் கதை சொன்னார்கள். யார் உச்சி முகந் தார்கள். அம்மாவின் மடிச்சேலையில் நாங்கள் ஏறி ஊஞ்சல் ஆடியதில்லை. என் தம்பி ரூபன் யாருக்கும் தெரியாமல் பாடசாலை நேரத்தில் சினிமாவுக்குப் போயிருக்கின்றான். அடுத்தவன் ரஞ்சன் சிகரெட் புகைத்திருக்கின்றான். நான் மாட்டு வண்டிலுக்கு வெடி வைத்திருக்கின்றேன். வவா வாத்தியாருக்கு ஊசி வைத்திருக்கின்றான். இவையெல்லாம் வீட்டுக்குத் தெரிய வந்தபோது அப்பா பூவரசம் கம்பு முறிய முறிய அடித்திருக்கின்றார். ஆனால், வெறும் கண்டிப்பினால் மட்டும் இவற்றைத் திருத்திவிட முடியுமா? எந்த இடத்தில் தவறு என்று யாருமே சிந்திப்பதில்லை. எமது இரண்டாவது தம்பி கரன் தனது நண்பன் ஒருவனோடு சேர்ந்து மது அருந்தியிருக்கிறான். பல தடவைகள் இது நடந்திருக்கின்றது. இந்தச் சங்கதி வீட்டுக்குத் தெரிய வநதபோது வீட்டில ஒரு பெரிய பூகம்பமே வெடித்தது. எங்கள் சந்ததியில் இல்லாத பழக்கம் இதுவென்று அம்மா தலையில் அடித்து அழுதாள். அப்பா அவனை அடித்தார். இப்படித்தான் தன்னை ஒரு ஆண்மகனாக நிலை நிறுத்திக்கொள்ள முடியும் என்று நினைத்துவிட்டான் பாவம்!... அவனைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவனுக்கு நல்ல உபதேசம் கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். என்னுடைய மனம்கூட அப்பப்போ அலைபாய்ந்திருக்கின்றது. ஆனால், என்னை நானே கட்டுப்படுத்திக்கொண்டேன். எழுத்தா

கூடாது' என்று கலம்பகம். சில வேளை எங்கள் வீட்டில் தீபாவளி தீபாவளியாகவே இருக்காது. எங்கள் தங்கை வாகினி என்ன வாங்க வேணும் என்பதை லிஸ்ற் போட்டு வைத்திருப்பாள். அவளுக்குத் தான் 'சிம்ரன்' என்ற நினைப்பு. அவள் முன்பக்கம் நின்றால் அப்பா பின் பக்கமாகத்தான் வீட்டுக்கு வருவார். அவளைக் காணும்போதெல்லாம் அப்பாவுக்குக் 'குலைப்பன்' அடிக்கும். அண்ணாவும் நானும் வயதிற்கு வந்த பின்பு நிலைமையைப் புரிந்து கொண்டோம். எங்களுக்கு உத்தியோகம் கிடைத்தது. நாங்கள் சம்பாதித்ததைக் கொண்டு இரண்டு தங்கைகளைக் கரை சேர்த்தோம். நானும் அண்ணாவும் திருமணம் முடித்த பின்புகூட எமது குடும்பத்தைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு இருந்தது. இனிமேல் மற்றத் தம்பிமாரும் சம்பாதிக்கவேண்டிய ஒரு கட்டாயமும் இருக்கின்றது.

வைத்தியசாலைக் கூடத்தில் இருந்த நான் கண்ணயர்ந்து விட்டேன். மாலை 4 மணியிருக்கும் எனது தஙகைதான் ஓடிவந்து என்னை எழுப்பினாள். 'அண்ணா! அண்ணா!' திடுக்கிட்டு எழுந்தேன். அவள் முகத்தில் சிரிப்பு 'அண்ணா உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கு என்றாள். எனக்கு சந்தோசம, வியப்பு! நான் பலவிதமான உணர்ச்சிகளாலும் ஆட்கொள்ளப்பட்டுக் கொணடிருந்தேன். தங்கச்சி அண்ணி சுகமாக இருக்கின்றாளா? என்று எனது மனைவியைப் பற்றிக் கேட்டேன். 'ஓம் அணணா' அண்ணியும் சுகமா இருக்கின்றா, குழந்தைகளும் சுகமா இருக்குதுகள்' என்றாள் தங்கை.

எனக்கு இரட்டைக் குழந்தைகள்! அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி பிள்ளைகள் தான். இதுபோதும். இந்த இரண்டு பிள்ளைகளையும் நல்லபடியாய் வளர்த்து... படிப்பித்து... ஆகா! எவ்வளவு சுகமான சுமைகள் என்மீது சுமத்தப்பட்டு இருக்கின்றது. எனது மனைவிக்கும் என்னைவிட அழகான பொறுப்புக்கள். பாவம் அவள்! எனது பிள்ளைகளை மிகுந்த கவனிப்போடு ஆரோக்கியமாக வளர்கக வேணும். அதற்குச் சரியான வழி இநத இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான். இந்த இரண்டு குழந்தைகளே போதும். நாம் இருவர் நமக்கிருவர். நல்லதொரு முடிவோடு வைத்தியரின் அறையை நோக்கி நடக்கத் தொடங்கினேன் ஒரு அப்பாவாக.

இணுவில்
சு.உத்திரன்

# ஜெயாவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க பெங்களூரில் சிறப்பு நீதி மன்றம்

(புதுடில்லி)

தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு எதிரான டான்சி நிலபேர ஊழல் வழக்கை



விசாரிக்க பெங்களூர் மத்திய சிறை, வளவில் சிறப்பு நீதிமன்றமொன்று அமைக்கப்படவுள்ளது.

இது விடயம் தொடர்பாக நேற்று பெங்களூரில் முக்கிய மத்திய அமைச்சரவைக் கூட்ட மொன்று நடைபெற்றுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே பெங்களூர் மத்திய சிறை வளவில் சிறப்பு நீதி மன்றம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கர்நாடக சட்ட சபை அமைச்சர் சந்திர கௌடா கூறியுள்ளார்.

''தமிழ் நாடு சிறுகைத் தொழில்" என்ற பெயருடைய டான்ஸி நிறுவனத்திற்குச் செந்தமான நிலம் உட்பட அளவுக்கு அதிகமான சொத்துக்களை ஜெயலலிதா கொள்வனவு செய்துள்ளமைக்கு எதிராக தி.மு.க.வும், ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் இணைந்து தாக்கல்செய்த வழக்கில் இருந்து சென்னை நீதி மன்றம் அவரை விடுத்தது.

இதனை அடுத்து உயர் நீதி மன்றத்தில் மேன முறையீடு செய்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதி மன்றம் கடந்த மாதம் 24ஆம்திகதி தள்ளுபடி செய்ததுடன் தமிழகத்திற்கு வெளியே இந்த வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது.

இதற்கிணங்கவே பெங்களூர் மத்திய சிறை வளவில் சிறப்பு நீதி மன்றம் அமைக்க மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சென்னை உயர் நீதிமன்றம் முன்னர் கூறியதற்கு ஏற்ப ஜெயலலிதா மனச்சாட்சிப்படி நடந்துகொள்ளவேண்டுமெனவும் அவ்வாறு நடந்துகொள்வதனால் அவர்கட்டாயம் பதவி விலகிக் கொள்ளவேண்டும் எனவும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

(உ-2)



உலகிலே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகவுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி பள்ளிச்சிறுவர்களின் கைகளை கயிற்றால் கட்டிக்கொண்டு குழந்தைத் தொழிலாளர்களின் துன்ப நிலையை எடுத்துவிளக்குகிறார் ஹிந்தி நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷபனா ஆஸ்மி.

WORLD NEWS உலக தரிசனம்

# சட்டப் பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு அமோக வெற்றி

(புதுடில்லி)

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், புதுடில்லி, சத்தீஸ்கார் ஆகிய 4 மாநிலங்களில் நடைபெற்று முடிந்த சட்டப் பேரவைத் தேர்தல்களில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சிக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது.

இதேவேளை, சத்தீஸ்கார் மாநிலத்திலும் ஆட்சியைக் கைப்பற்ற பாரதிய ஜனதாக்கட்சிக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், புதுடில்லியில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

இந்த 4 மாநிலங்களிலும் பதிவான வாக்குகளை எண்ணும் பணி பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் நேற்றுக்காலை ஆரம்பமானது.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 200 சட்டமன்றத் தொகுதிகளில் இதுவரை 61 தொகுதிகளுக்கான முடிவுகள அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 40 .தொகுதிகளில் பாரதிய ஜனதாக்கட்சி வெற்றியீட்டியிருப்பதுடன்.

காங்கிரஸ் 19 தொகுதிகளிலும் சுயேட்சைகள் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

முடிவுகள் அறிவிக்கப்படாத பெரும்பாலான தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சியே முன்னணி வகிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய பிரதேச மாநிலத்தில் 230 சட்ட மன்றத் தெகுதிகளில் இதுவரை 15 தொகுதி முடிவுகளே அறிவிக்கப்பட்டுள்ளன, அவற்றிலும் 10 தொகுதிகளில் பாரதிய ஜனதாகட்சியே வெற்றியீட்டியுள்ளது.

சத்தீஸ்கார் மாநிலத்தின் முடிவுகள் இன்னும் வெளியிடப்பட வில்லை.

(உ-2)



ஈராக்கில் அண்மையில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலுக்காக தீவிரவாதிகளால் பயன்படுத்தப்பட்ட இக்கார் சின்னா பின்னமடைந்த நிலையில் இதுவரை அகற்றப்படாது தெருவில் கிடக்கும் காட்சி.

# உலக அழகிப் போட்டிக்கு கடுமையான விதிகள் விதிப்பு

(பெய்ஜிங்)

சீனாவில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள உலக அழகிப் போடடிக்கு கடுமையான நடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியை நடத்த சீனாவில் கடந்த 54 ஆண்டுகளாக விதிககப்படிருந்த தடை இவ் வருடம் நீக்கப்பட்டதையடுத்தே, இந்தக் கடுமையான விதிகள் கொண்டுவரப் பட்டுள்ளன என்று இந்த போட்டிக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் குழுவின் தலைவர் போல் ரிட்லேயே அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் கலந்து கொள்வோர் மது அருந்துதல் மற்றும் ஆட்சேபகரமான செயல்களில் ஈடுபடக்கூடாது என்பதுடன், அவர்கள் எங்கே செல்கின்றார்கள், யாருடன் பேசுகிறார்கள என்பவை கண்காணிக்கப்படும் என்பனவே அந்த விதிகளாகும்.

அத்துடன், போட்டியில் கலந்து கொள்பவர்கள் அவர்களது நண்பர்கள், பெற்றோர்கள் ஆகியோரை மட்டுமே சந்தித்து பேச முடியும் எனவும் போட்டிகள் முடிவடைந்ததும் இவ் விதிகளில் சில தளர்த்தப்படுமென போல்ரிட்லே தெரிவித்துள்ளார்.

(தி-2)

# ஆயுதங்களைக் கைவிடுவது பற்றி ஆப்கான் அரசுடன் பேச்சு

(காபூல்)

தமது ஆயுதங்களைக் கைவிடுவது தொர்டர்பாக ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடன் பேச்சுகளில் கலந்து கொள்ள அந்த நாட்டு ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் இணக்கம் தெரிவிததுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதக் குழுக்களை நிராயுத பாணிகளாக்கும் திட்டத்தில் 50 வீதமே வெற்றியளித்துள்ளதாக அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன்தினம் கூறியுள்ள நிலையிலேயே ஆயுதக் குழுக்கள் இந்த இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளன.

தலிபான்களின் ஆட்சியில் இருந்து ஆப்கானிஸ்தான் வீழ்ச்சியுற்ற பின்னர் நாடு முழுவதிலும் பல்வேறு ஆயுதக் குழுக்கள் இயங்கிவருகின்றதாக அந்நாட்டு அரசாங்கத்தினால் அடிக்கடி குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும் .

இதேவேளை, ஆப்கானிஸ் தானின பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரின் தளங்கள் மீது தலிபான் படைகள் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

# ஆஸி.-எதிர்கட்சிக்கு புதிய தலைவர் தெரிவு

(கான்பரா)

அவுஸ்திரேலிய எதிர்கட்சியான தொழில் கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் மார்க் லெற்றம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் கட்சிகுள் ஐக்கியத்தை கட்டிழெுப்புவார் என்ற நம்பிக்கையிலேயே தொழிற்கட்சியினர் அவரைத் தெரிவு செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் வாழும் சகல மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்குவதுடன், சுகாதார நலன பேணல், கல்வி, சிறுவர் அறிவு, வளர்ச்சி போன்ற முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று புதிய தலைவர் மார்க் லெற்றம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இதற்கு முன்னர் தொழிற்கட்சியின் தலைவராக இருந்த சைமன் தனது பதவியை கடந்த சனிக்கிழமை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-2)

# அமெரிக்காவின் பார்வை ஆபிரிக்க நாடுகள் பக்கம்

## பிரான்ஸ் மிக்க மகிழ்ச்சி

(பரிஸ்)

அமெரிக்காவின் கவனம் தற்போது ஆபிரிக்க நாடுகளின் பக்கம் திரும்பியுளளமை பிரான்ஸ் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

டுனீஷியா நாட்டிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஸ் ஷெராக், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையி லேயே இவ்வாறு மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

ஆபிாக்க நாடுகளான டுனீஷியா, அல்ஜீரியா மற்றும் மொரோக்கோ ஆகிய நாடுகளுக்கு தற்போது கொலின் பவல் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயம் அமெரிக்காவின் கவனங்கள் தற்போது ஆபிரிக்க நாடுகளின் பக்கம் திரும்பியுள்ளதை எடுத்துக்காட்டுவதாகவும், இந்த விஜயத்தின் போது ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார, அரசில் நிலைமைகள் குறித்து கொலின்பவல் அறிந்து கொள்ள வாய்ப்புகள் இருப்பதாகவும் ஷெராக் மேலும் கூறியுள்ளார்.

(உ-2)



சதாமின் மாளிகையில் இருந்து அகற்றப்பட்டசிலை

# சதாமின் மாளிகையில் இருந்த மா பெரும் சிலை அகற்றப்பட்டது

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் மாளி கையில் உள்ள 30 அடி உயரமான் வெண்கலத்தால் உருவாக் கப்பட்ட சிலையொன்றை அமெரிக்கக் கூட்டுப்படையினர் அழித்துள்ளனர்.

மிகப் பெரிய பாரந்தூக்கியின் உதவியுடன் 7 தொன் எடை கொண்ட இச்சிலை நேற்று முன்தினம் அகற்றப்பட்டதும்,

அங்கு இருந்த அமெரிக்கக் கூட்டுப்படை அதிகாரிகள் மற்றும் படையினர் இச் சம்பவத்திற்கு பெரும் ஆரவாரம் செய்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அதிபர் மாளிகையில் உள்ள இது போன்ற ஏனைய 3 சிலைகளும் மிக விரைவில் அகற்றப்படுமெனவும் ஈராக்கில் தற்போதுள்ள அமெரிக்க நிர்வாகி போல் பிறிமர் கூறியுள்ளார்.

நிர்வாகியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் போல் பிறிமரின் தலைமை அலுவலகமாக சதாமின் மாளிகை செயற்பட்டு வருவதும் அங்கு பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றமையும் தெரிந்ததே.

(உ-2)



தாங்களும் எதிலும் சளைத்தவர்களில்லை என்பதை நிருபிக்கும் வகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உலக ஊனமுற்றோர் தினத்தன்று இரண்டு கைகளும் ஊனமடைந்த ஒருவர் தனது கைவண்ணத்தை காட்டுகிறார்.

# ஏழை மக்களின் வாழ்வை ஒளிபெறச் செய்த அப்பழுக்கற்ற கூட்டுறவாளன் ''அமரர் வீரசிங்கம்''

**அமரர் வீரசிங்கம் ஒரு நடமாடும் கூட்டுறவுப் பல்கலைக்கழகம். அவர் கூட்டுறவால் சாதித்தவை ஏராளம். அவரின் கூட்டுறவுத்தன்மை காலத்தால் அழியாது. அமரர் க.கைலாசபதி**

ஏழு தசாப்தங்களாக கூட்டுறவுத் துறையிலும் கல்வித்துறையிலும் தனது வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்து காட்டிய பெரியார் வீரசிங்கத்தின் முப்பத்தொன்பதாவது நினைவு தினத்தை யாழ்.குடாநாட்டுக் கூட்டுறவாளர்கள் இன்று நினைவு கூருகிறார்கள். கல்வித்துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் பல்வேறு பட்ட சாதனைகளை பல சோதனைகளின் மத்தியில் நிலை நாட்டி வெற்றிகண்டவர் அமரர் வீரசிங்கம்.

1947 ல் பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் பிரவேசித்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தபோதும் மீண்டும் 1952 இல் இதேதொகுதியில் போட்டியிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரான முதல் கூட்டுறவாளன் அமரர் வீரசிங்கம்.

பாராளுமன்றத்தில் தாய்மொழிக் கல்வி தொடர்பாகவும் ஆங்கிலக் கல்வி தொடர்பாகவும் தொழில் நுட்பக் கல்வியின் அவசியத்தையும் 1952ஆம் ஆண்டுகளில் எடுத்துக் கூறியவை இன்று நிதர்சனமாக அமைந்துள்ளது.

தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தி பாராளுமனறத்தில் இவ்வாறு பேசியுள்ளார்.

''எமது நாடு சுதந்திரம் பெற்ற நாடு. எங்களுக்கென்று சொந்தக் கொள்கை உண்டு. செயல்ரீதியில் கல்விக் கொள்கைகளைத் தயாரிப்பதை நான் வரவேற்கின்றேன். எங்களுக்கென்று ஒரு மொழிக் கொள்கையுண்டு எங்களுக்குத் தேவையானது என்னவென்றால் மொழியல்ல, கல்விதான். மொழியென்பது ஒரு தேசியக் கொள்கையாகும். பல்கலைக கழகம் வரை மாணவர்களுக்கு தாய் மொழியில் கல்வி போதிப்பதை மிகவும் விரும்புபவர்களில் நானும் ஒருவன். ஆனால் அதற்கான வழிமுறை



களை நாமே செய்ய வேண்டும். போதுமான வழிமுறைகள இல்லாமல் எம்மால் அந்த இலக்கை அடைய முடியாது என்று அன்று அமரர் வீரசிங்கம் பாராளுமன்றத்தில் கூறியவை இன்று நடைமுறையில் பல்கலைக்கழகங்களில் தாய மொழி மூலமான கல்வி போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கூட்டுறவுத் துறையில் அமரர் வீரசிங்கம் சாதித்த சாதனைகள் பலவாகும். கூட்டுறவுப் பாலத்தால் வடக்கு-கிழக்கை மட்டுமல்லாமல் தென்னிலங்கையையும் ஒன்றாக இணைத்து வெற்றி கண்டவர் அமரர் வீரசிங்கம்.

## கூட்டுறவாளன்

பொருளாதார வளத்தில் நலிந்த ஏழைமக்களின் வாழ்வில் ஒளியேற் செய்வதற்குருவான கூட்டுறவை, கூட்டுறவுக் கொள்கை வழி நின்று தனது ஆளுமையாலும் சிறந்த தலைமைத்துவத்தினாலும் கூட்டுறவு இயக்கத்தை வடபகுதியில் புனிதமான ஓர் இயக்கமாகக் கட்டி வளர்த்தார்.

இன்று கூட்டுறவுத் துறையில் தம்மைத் தாமே சுடுபடுத்தி கூட்டுறவுத் தலைமைத்துவத்தை அலங்கரிக்கும் ''நவீன கூட்டுறவாளர்களின்'' கூட்டுறவுச் செயற்பாடுகளுக்கு எதிர் மறையானவராக அன்று விளங்கினார்.

கூட்டுறவாளர்களுக்கென கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கென வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையை உருவாக்கி அச சபையின் தலைவராக இறக்கும் வரை இருபத்தியாறு வருடங்கள் கூட்டுறவாளர்களினால் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டு வந்தார். கூட்டுறவு பிரசாரத்துக்கும், கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தையும் உணர்ந்து கூட்டுறவுக் கல்லூரி நிறுவி அதன் மூலமும் கூட்டுறவுக் கல்வி விரிவாக்கத்துக்கென ''ஐக்கிய தீபம்'' சஞ்சிகையை தமிழிலும் ''கோப்பிறேற்ரர்'' என்னும் சஞ்சிகையை ஆங்கிலத்திலும் வெளியிட்டு வைத்தார். இதன் மூலம் கூட்டுறவு பற்றிய விளக்கத்தைப் பாமர மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல முடிந்தது.

கூட்டுறவினுள் பிரவேசித்த அமரர் வீரசிங்கம் தனக்கென ஓர் சிறந்த கூட்டுறவுத் தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

புனிதமான கூட்டுறவுத் துறைக்கு மெருகூட்டும் வகையில் அவரது ஒவ்வொரு செயற்பாடும் அமைந்திருந்தது. இன்று கூட்டுறவில் விரும்பத்தகாத போட்டிகள், பொறாமைகள், கழுத்தறுப்புக்கள் அன்றைய கூட்டுறவில் காணப்படவில்லை.

இன்றைய கூட்டுறவைப் பொறுத்தவரையில் அதன் தலைமைத்துவத்தில் உள்ளோர் தமது சுய ஆளுமையை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றார்களே ஒழிய ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ அல்லது அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறைகாட்டுவோராகத் தெரியவில்லை.

''ஒருவர் பலருக்காகவும்; பலர் ஒருவருக்காகவும்'' என்ற நிலை மாறி ''தங்களுக்குத் தாங்களே'' என்ற முறையில் செயற்பட்டு வருவதனால் கூட்டுறவியக்கத்தின் செயற்பாட்டில் உள்ள நிறுவனங்கள் திசை மாறி முதலாளித்துவத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் திணறுவதைக் காண முடிகிறது.

அமரர் வீரசிங்கம் காலத்தில் தனித்துவமாகத் தனித் தன்மையைப் பேணி வந்த கூட்டுறவு நிறுவனங்கள் இன்று தனித்தன்மையை இழந்து யார் யாரிடமோ தம்மை அடகுவைத்து ''தாம் தான் கூட்டுறவாளர்'' என்ற இறுமாப்புடன் பவனி வருகிறார்கள். இவர்களிற்கு எதிர்மாறாகக் கூட்டுறவு வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர்தான் அமரர் வீரசிங்கம்.

அமரர் வீரசிங்கத்துக்கு ஆண்டு தோறும் விழா எடுப்பதிலும் பார்க்க அவர் வழி நின்று புனிதமான கூட்டுறவு இயக்கத்திற்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் களங்கம் கற்பிக்காது கூட்டுறவில் பணிபுரியும் பணியாட்களின் அப்பழுக்கற்ற சேவைக்கு மதிப்புக் கொடுத்து அவர்களுக்குரிய

***அமரர் வீரசிங்கத்தின் 39 வது நினைவுதினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. (ஆ.ர்)***

ஊதியங்களை குறைவின்றி முறையாக வழங்குவதற்கு ஆவன செய்தலே இன்றைய தேவையாகும்.

அமரர் வீரசிங்கத்தின் நாமத்தை முன்வைத்து கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாகக் காட்சி தரும் நான்கு மாடிக் கட்டிடத்திற்கு முன்பாக அவருக்கு சிலை வடித்து நினைவு கூரக் கூட்டுறவாளர்கள் முன் வரவேண்டும். □

---

# முதல் இன்னிங்ஸில் 331 ஓட்டங்கள்

இலங்கையணிகளும் இங்கிலாந்து அணிக்குமிடையில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது இங்கிலாந்து அணி, அதன் முதல் இன்னிங்ஸிற்காக 2 விக்கெற்றுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணிசார்பில் மார்க்ரஸ்கொத்திக் 23 ஓட்டங்களையும், மைக்கல்வோன் 24 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளனர். பந்துவீச்சில் இலங்கை அணிசார்பில் முத்தையா முரளிதரன் இந்த இரண்டு விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தார்.

இவ் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின் போது பெய்த மழைகாரணமாக போட்டி நேரத்தில் ஏற்பட்ட நேரஇழப்பை ஈடுசெய்யும் முகமாக இரண்டாம் நாள் ஆட்டம் காலையில் நேரகாலத்துடனே ஆரம்பமானது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது 138ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களை இழந்திருந்த இலங்கை அணி தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் குமார் சங்ககாரவும், திலகன் சமரவீரவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இலங்கை அணிக்காக ஓட்டங்களைக் குவித்திருந்தனர். இவ்விருவரும் 5வது விக்கெற் இணைப்பாட்டமாக 70ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குமார் சங்ககார 71ஓட்டங்களையும், சனத் ஜயசூரிய 48ஓட்டங்களையும், கிலான சமரவீர 45ஓட்டங்களையும், முத்தையா முரளிதரன் 38ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணிசார்பில் அஸ்லீஹையில்ஸ் 4 விக்கெற்றுக்களையும், அன்ரூ பிளிறஒவ் 3விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

(உ-68)



டேவிஸ் கோப்பை டென்னிஸ் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய ஆஸி. வீரர் டாட் உட்பிரிட்ஸ், வெற்றிக் கோப்பைக்கு அருகில் தனது மகளுடன் அமர்ந்திருக்கிறார்.

# ஆஸி.அணியை வெல்லவேண்டும் என்பதே இந்திய அணியின் இன்றைய குறிக்கோள்

## சௌரவ் கங்குலி தெரிவிப்பு

இந்திய கிரிக்கெற் அணி வலுவானது என்பதனை அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி அறிந்திருப்பதால், அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள



டெஸ்ட் போட்டிகள் இரு அணிகளுக்குமே சவாலாக அமையும் என இந்திய கிரிக்கெற்அணியின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முதலாவது டெஸ்ட்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது கங்குலி இதனைத் தெரிவித்திருந்தார்.

இந்திய, அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள பிறிஸ்பேணில் தற்போது நடைபெற்று வருகின்றது. இதற்கு முதல் நாள் இந்திய கிரிக்கெற் அணித்தலைவர் கங்குலிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இந்திய அணியிடம் மட்டுமே தோல்வியைத் தழுவிய அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி அதனை மறநதிருக்காது. அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியை வெல்லவேண்டும் என்பதில் இந்திய அணி குறியாகவுள்ளது. இவ் டெஸ்ட் தொடரானது இந்திய அணிக்கு ஒரு சோதனைக்களம் என்று மேலும் தெரிவித்திருந்தார்.

1947/48ஆண்டுகளில் இந்திய, அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான டெஸ்ட்போட்டித்தொடர் முதலாவது பலப்பரீட்சையாக அமைந்தது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 5போட்டிகள் கொண்ட இவ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணியானது 4:0 என்ற கணக்கில் வெற்றிகொண்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இதுவரை இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 60டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் அவுஸ்திரேலிய அணியானது 29போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கின்றது. இந்திய அணி 13போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கின்றது. எனினும் 17போட்டிகள் வெற்றி தோல்வியற்ற நிலையிலும், ஒரு போட்டி சமநிலையிலும் நிறைவடைந்திருக்கின்றன.

1969/70ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் நடைபெற்ற எந்தவொரு டெஸ்ட் தொடரிலும் அவுஸ்திரேலிய அணியை வெற்றிபெற இந்திய அணி விடவில்லை. கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் நடைபெற்ற 3போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் 2:1என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் இவ்வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 3டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 3:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணியிடம் இந்திய அணி தோல்வியைத் தழுவி இருந்தது.

இதேவேளை தற்போது நடைபெற்று வருகின்ற இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியே அவுஸ்ரேலிய டெஸ்ட்அணித் தலைவரான ஸ்ரீவோவிற்கு கடைசி டெஸ்ட்போட்டி ஆகும். இதன் பின்னர் இவர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார். இந்த டெஸ்ட் போட்டியில இந்திய அணிக்கு ஸ்ரீவோ சிம்ம சொப்பனமாகத் திகழ்வார் என்றும், இவர் இந்திய அணிக்கெதிராக டெஸ்ட் போட்டிகளின் போது அதிக ஓட்டங்களையும் இப்போட்டியில் பெற்றுக்கொள்வார் என்றும் கிரிக்கெற் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-68)

### பாகிஸ்தான் கிரிக்கெற்சபை தலைவர் இராஜினாமா

பாகிஸ்தான் கிரிக்கெற்சபைத் தலைவர் ஜெனரல் தாகீர் ஷியா தனது பதவியை கடந்த 2ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்.

4 ஆண்டுகளாக பாகிஸ்தான் கிரிக்கெற்சபைத் தலைவராக பதவி வகித்துவந்த இவர் தனது சொந்த அலுவல்களைக் கவனிப்பதற்காகவே பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயினும், பாகிஸ்தான் அணியில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவந்த, தலைமை மாற்றங்கள் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள், பயிற்சியாளர்கள் தேர்வாளர்களுக்கிடையே ஏறபட்ட வார்த்தை மோதல்கள் காரணமாகவே இவர் பதவி விலகியிருப்பதாக பாகிஸ்தானில் உள்ள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-10)

## விளையாட்டுச் செய்திகள்

# ஆதிக்க சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து

# வரவு-செலவுத் திட்டத்தை நாம் தயாரிக்கவில்லை

# குற்றச்சாட்டுக்களுக்கு பீரிஸ் மறுப்பு

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது உலக வங்கியின் யோசனைகள் சிலவற்றை அரசாங்கம் நிராகரித்து விட்டதாக அரசியல் அமைப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் கடந்த செவ்வாயன்று புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடநத 19ஆம் திகதி நிதி அமைசசர் கே.என்.சொக்ஸியினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் சர்வதேச சமூகத்தின் தேவைக்கு ஏற்ப தயாரிக்கப்பட வில்லை.

சமாதான நடவடிக்கையின் மூலம் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரத் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் எனவே, சில்லறை வியாபாரிகளிற்கு பெறுமதிசேர் வரியை விதிக்குமாறு உலக வங்கி விடுத்த வேண்டுகோளை, நிதி அமைச்சர் மறுத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சர்வதேச நாணய நிதியத்திற்கும் உலக வங்கிக்கும் தேவையான வகையில் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படமாட்டாது என்றும், இலங்கை வாழ் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே இவ் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. எனவே, இதுபற்றி தமக்குத் தெரியும் என்றும் நிதியமைச்சர் பதிலடி கொடுத்துவிட்டார்.

இதேபோன்று பல சந்தர்ப்பங்களில் அமெரிக்காவில் இருந்தும், உலக வங்கியில் இருந்தும் வந்த எச்சரிக்கைகளை அரசு நிராகரித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய வரவு - செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

ஒரு சில துறைகளுக்கான பூரண அதிகாரங்களின்றி சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை இன்று பிரதமரால் பொறுப்பேற்க முடியாதிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலோ அல்லது வேறு எந்தப் பிரதேசத்திலேயோ ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் இராணுவத்திற்கோ அல்லது கடற்படையினருக்கோ ஆணை வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதிகாரம் இல்லை.

இந்நிலையில், அவர் எப்படிச் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது?

எனவேதான், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அதிகாரங்கள் வேண்டும் எனக் கோருகின்றார்.

அவ்வாறு அதிகாரங்களைத் தர ஜனாதிபதி விரும்பாதுவிட்டால், சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதியே முன்னெடுத்துச் செல்லட்டும். அதற்கு நாங்கள் தடை ஏற்படுத்தமாட்டோம். பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் எனவும் பிரதமர் ஜனாதிபதியிடம் பலதடவை கூறியிருக்கிறார்.

ஆனால், ஜனாதிபதியோ பேச்சளவில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறி



வருகிறாரே தவிர இதுவரையும் எதுவித செயலிலும் இறங்கவில்லை.

தற்போது சமாதானப் பேச்சு விடயத்தையும் மறந்துவிட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# இலங்கை நீதிக் கட்டமைப்பில் ஓட்டை என்கிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தற்போதைய நீதிக் கட்டமைப்பில் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பளிக்கக் கூடிய பிரமாணங்கள் இருந்தாலும், குற்றச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களுடைய உரிமைகள் தொடர்பாக அதிகளவு கவனம் செலுததப்படுவதில்லை என சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் முன்னின்று உழைத்த காஞ்சனா அபிபாலா என்னும் சட்டத்தரணியின் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே சட்டமா அதிபர் மேற்கட்டவாறு தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூடடத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வது நீதித்துறையின் அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும். ஒருவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்படும்வரை அவர் நிரபராதி என்றே கருதப்படுவார்.

ஆனால், குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாகக் கூடிய பிரமாணங்கள் எதுவும் இல்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ)

# நேர்முகத்தேர்வு அனுமதிக் கடிதம் கிடைக்காதோர் கவனத்திற்கு

(கிளிநொச்சி)

தேசிய கல்வியியற் கல்லூரியில் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்து அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை விட உயர்வுப் புள்ளி பெற்றிருந்தும் நேர்முகப் பரீட்சைக்கான அனுமதிக கடிதம் கிடைக்கப்பெறாதோரும் 2001 ஆண்டு 2ஆம் தடவையாக கல்விப் பொதுத தராதர உயர்தரத் தேர்வில் நானகு பாடங்களுக்கு தோற்றி அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை விட உயர் புள்ளி பெற்றிருந்து நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாதோரும் எதிர்வரும் 20ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்வப் பணிமனைக்கு வருகை தந்து தங்கள் அனுமதி தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேணாட் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2004 ஆம் ஆண்டு கல்வியியல் கல்லூரிகளுக்கான வெட்டுப்புள்ளிகளை கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய வலயக் கல்விப் பணிமனைகளில் பார்வையிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-64,10)

## டிப்போ ஊழியர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

அனுராதபுரம் பஸ் டிப்போ ஊழியர்கள் கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் பல கோரிக்கைகளை முன் வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இப்பகுதி மக்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-60)

## மஹா கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பஞ்ச குண்டல மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது. (உ-246)

# செய்தித் துளிகள்

## செயல்திறன் இயல் அளவுவிருத்தி பயிற்சிவகுப்பு

(காரைநகர்)

யாழ். மாவட்ட சமூக ஆதார நிறுவனத் தலைவர்களின் செயல் திறன் இயல் அளவை விருத்திசெய்வதற்கான பயிற்சி வகுப்பொன்று எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 3 தினங்களுக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேற்படி பயிற்சிக்கு கிராம அபிவிருத்தி சங்கம், சனசமூக நிலையம், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் காரைநகர்ப் பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட சுமார் 40 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-246)

## துன்புறுத்தல்

(கொழும்பு)

சுமார் 200வரையான சிறுவர்கள் இவ்வருடம் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகியிருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைக்கான விசேட பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தைவிட இவ்வருடத்தில்மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக இப்பொலிஸ் பிரிவின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

புறக்கோட்டை, பேருவளை, ஹிக்கடுவ, நீர்கொழும்பு, கொள்ளுப்பிட்டி, ஜா-எல, கொழும்பு கடற்கரையோரங்களை அண்டிய வீதியோரச் சிறுவர்களே இத்தகைய பாலியல் துன்புறுத்தலிற்குள்ளாகியுள்ளதாகவும் அந்தப்புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-10)

## வீட்டுத் தோட்டப் பயிற்சி

(காரைநகர்)

காரைநகர்ப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடும் பெண்களுக்கு எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் உள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியில் காரைநகர்ப பிரதேசத்தில் உள்ள 9 கிராம அலுவலர் பிரிவுகளிலுமிருந்து சுமார் 50 பெண்கள் பங்குபற்றவுள்ளனர். (உ-246)

## கைலாசபதி நினைவுநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மாக்ஸிச லெனினிஸச் சிந்தனையாளரும், ஈழத்து மக்கள் இலக்கிய முன்னோடியும், தமிழ் இலக்கிய ஆய்வுப் பரப்பைச் செழுமைப் படுத்தியவருமான பேராசிரியர் க. கைலாசபதியின் 21 ஆவது ஆண்டு நினைவாக, அரங்க ஆற்றுகை மற்றும் கருத்துரை நிகழ்வுகள் என்பன எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 5.00 மணிக்கு இராம கிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (தி-18)

## மத்தியஸ்தர் பரீட்சை

(மருதங்கேணி)

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிகளில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி நடாத்தப்படவுள்ளது.

இதற்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளதாகவும், இப்பரீட்சை எழுத்துப் பரீட்சை மற்றும் உடற்திறன் அளவீடு ஆகியவற்றைக் கொண்டிருக்கும் எனவும் இலங்கை உதைபந்தாட்ட சமமேளனம் அறிவித்துள்ளது. (தி35)

# தமிழ் மக்களின் உரிமைகளை தேசிய அரசின் கீழ் பறிக்கக்கூடாது

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசாங்கம் என்ற கோட்பாட்டின் கீழ தமிழ் மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் எவையும் முடக்கப்படக்கூடாது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்கருத்தரங்கில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இனவாதம் மற்றும் போர் என்பனவற்றால் இலங்கைவாழ் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் இவற்றால் விரக்தியடைந்துள்ளனர்.

இதனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான முரண்பாடுகளை மறந்து, பேச்சு வார்த்தைகளைத் தொடர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தமிழ் - சிங்கள கலைக் கூடல் நிகழ்வுகளை இனவாத சக்திகள் சீர்குலைக்க முனைந்தன.

இக் கலைக்கூடல் நிகழ்வுகளைக் குழப்ப முயற்சி செய்ததன் மூலம், அவர்கள் போரை விரும்புகின்றனர். என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வளவு காலமும் மறைமுகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த இனவாத சக்திகள் தற்போது தமது சமாதான எதிர்ப்பை வெளிப்படையாக வெளிப்படுத்தத் தீர்மானித்துள்ளனர்.

இத்தகைய சக்திகளை பொது மக்கள் ஒதுக்கவேண்டும். அப்போது தான் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண முடியும் எனத் தெரிவித்துள்ளார். (தி-61)

# 25 அம்புலன்ஸ் வண்டிகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 125 அம்புலன்ஸ் வண்டிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இவ் அன்புலன்ஸ் வண்டிகளின் கொள்வனவுக்கு என சுமார் 30 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கென 25 அம்புலன்ஸ் வண்டிகளைச் சுகாதார அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இவற்றில் வடக்கில் உள்ள இரு வைத்தியசாலைகளுக்கு இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளும், கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 23 அம்புலன்ஸ் வண்டிகளும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இவை அடுத்தமாதம் 4ஆம் திகதி கொழும்பு மாநகர சபை மைதானத்தில் வைத்து மாகாண சுகாதார அமைச்சு அதிகாரியிடம் கையளிக்கப்படவுள்ளன. (தி-61)

# மகாவம்சம்

## தரும் இலங்கை வரலாறு

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

33 வட்டகாமினி மீண்டும் அரசனானதும் முதல் வேலையாக தித்தாராமை சமணப்பள்ளியை உடைத்துவிட்டு, அவ்விடத்தில் **அபயகிரிவிகாரையை** அமைப்பித்தான். வட்ட காமினி **அபயன்** என்ற தனது பெயரின் இறுதியையும் பரிகசித்த சமணன் **கிரி**யின் பெயரையும் இணைத்து அதற்கு அபயகிரி விகாரை எனப் பெயரிட்டான். முன்னர் கரந்துறைத்த போது உதவிய மகாதிஸ்ஸ தேரரை அழைப்பித்து அந்த விகாரையை அவரிடம் கையளித்தான். தனிப்பட்ட முறையில் அபயகிரி விகாரையை ஏற்றுக்கொண்டமை ஒழுக்கத்துக்கு (வினய) மாறானதென மகாவிகாரைப் பிக்குகள் கருதினர்.

கவர்ந்து செல்லப்பட்ட சோமதேவியை மீண்டும் வரவழைத்துக் கொண்டான். அவள் பெயரால் சோமராம சேத்தியத்தை கட்டுவித்தான். மகா தூபிக்கு வடக்கே **சிலாசோபக கந்த** சேத்தியத்தை அமைத்தான்.

வட்டகாமினியின் எட்டு மாவீரர்களில் ஒருவனான **உத்தியன்**, அனுராதபுரத்தின் தென் பகுதியில் **தக்கின** விகாரையைக் கட்டினான். (இத்தக்கினவிகாரையே எல்லாளமன்னனின் சமாதி என்பர்) இவ்வாறு அவனது அமைச்சர்களும் பல விகாரைகளைக் கட்டுவித்தனர்.

வட்டகாமினியின் காலத்தில் பௌத்த மதத்தில் இரு பிளவுகள் ஏற்பட்டன. ஏற்கனவே மகாதிஸ்ஸ தேரரை மகா விகாரையினர் விரும்புவதில்லை. அவருடைய சீடர், **பகலமசுதிஸ்ஸ தேரர்** மகா விகாரையிலிருந்து விலகி, அபயகிரி விகாரையில் தான் சார்த்த ஐநூறு பேருடன் புகுந்தார். அவர்கள் தேரவாத பௌத்தத்திலிருந்து விலகிக் கொண்டனர். அபயகிரி விகாரை, மகாவிகாரைப் பிக்குகள் வேறாகினர். தேரவாதத்தில் இரு பிரிவுகள் தோன்றின என்கிறது மகாவம்சம்.

### பதினொரு மன்னர்கள்

மகாவம்சத்தின் 34 வது (xxxiv) அதிகாரம் இலங்கையை ஆட்சி புரிந்த பதினொரு மன்னர்கள் பற்றி விபரிக்கின்றது. வட்டகாமினியின் மரணத்தின் பின்னர் அவனது வளர்ப்பு மகனான **மகாசூலி மகாதிசன்** என்பான் அரசனானான். (கி.மு. 17-கி.மு. 3) பதினான்கு ஆண்டுகள் அமைதியாகவும் நீதியாகவும் அரசாண்டான். **பண்டவாபி, அபயகல், வன்க வததகல், திகாபாகுயகல், ஜலகம** முதலான விகாரைகளை அமைத்தான். மகாசூலி மன்னனின் பிற்காலத்தில், வட்டகாமினியின் சொந்த மகனான **சோரநாகன்** ஒரு புரட்சிக்காரனாக மாறி மன்னனுக்குப் பிரச்சினைகள் தந்தான். அவன் மன்னனாக வந்ததும் தான் புரட்சியாளனாகக் கலகம் செய்த காலத்தில் தனக்கு அடைக்கலம் தராத பதினெட்டு விகாரைளை இடித்தழித்தான். பன்னிரண்டு ஆண்டுகால ஆட்சி முடிவில், மகாராணி **அனுலா**வால் வழங்கப்பட்ட நஞ்சூட்டப்பட்ட உணவை உண்டு மரணமடைத்தான்.

அவனுக்குப் பின்னர் மகா சூலியின் மகனான தீசன் அரசகட்டிலேறினான். சோரநாகனின் மனைவி அனுலா, அரண்மனை வாயிற் காற்போனான **சிவா** என்பவன் மீது ஏற்பட்ட தணியாத காதலால் தீசனை நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு, சிவாவை அரசனாக்கி, தான் ராணியாக அமர்ந்து கொண்டாள். ஓராண்டும் இரு மாதங்கள் கழிந்ததும், அனுலா தமிழனான **வட்டுகன்** என்ற நகரத் தச்சன் மீது ஆசை கொண்டு, கணவன் சிவாவை நஞ்சூட்டிக் கொன்று நீக்கிவிட்டு, வட்டுகனை மன்னனாக்கினாள். அனுலாவின் காமம் இத்துடன் அடங்கிவிடவில்லை. **தீசன்** என்ற விறகுகாவி விற்பவனைக் கண்டு காதலுற்று, வட்டுகனை அதேமுறையில் மேலுலகம் அனுப்பிவிட்டு, தீசனை மன்னனாக்கி தான் ராணியானாள். பின்னர் **நீலியன** என்ற பிராமண அரச குருவின் மேல் காதல் உண்டாகி தீசனைக் கொன்று நீலியனை மன்னனாக்கினாள். அவனையும் கொன்று அனுராதபுர அரியணையில் தானே ராணியாக வீற்றிருந்தாள். அனுலாவின் காமப் பசிக்கு அரண்மனைக் காவலர்களில் முப்பத்திரண்டுபேர் பலியாகியதாக மகாவம்சம் பெருமைப்படும். அனுலாவினதும் அவள் காதலர்களினதும் ஆட்சி 4 வருடங்கள் 3 மாதங்கள் ( கி.பி.12 - 16) நீடித்தது.

அனுலாவைக் கொன்று ஆட்சியிலிருந்து நீக்கிய மகா சூலியின் இரண்டாவது மகன் **குடக்கண்ண தீசன்** இருபத்திரண்டு ஆண்டுகள் அரசாண்டான். (கி.பி. 16 - கி.பி. 38) அவனுக்குப் பிறகு அவனது மகனான பாதிக அபயன் (கி.பி. 38 -கி.பி. 66) மன்னனானான். இவனை **பாதிகராஜா** எனவும் மகாவம்சம் கூறும். அவனுக்குப் பிறகு அவனது இளைய சகோதரனான **மகாதாடி மகாநாகன்** பன்னிரண்டாண்டுகள் அரசாண்டான். ( கி.பி. 66 -78). அம்பத்தலா தூபியை இவனே கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகிறது.

(தொடரும்)

**அபயகிரிவிகாரை**



நேற்றைய வலம்புரியில் வெளியாகிய மகாவம்சம் - 32 ஆம் அத்தியாயத்தில் வருகின்ற துட்டகாமினி என்கின்ற பெயரை வட்டகாமினி என மாற்றி வாசிக்கவும். ( பந்தி 3ல் இருந்து இது பொருந்தும்)

# தோட்டத்துறை நெருக்கடிகளால் தொழிலாளர்கள் பாதிப்பு

## பொ.ஐ.மு. உறுப்பினர் ரத்னசிறி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தோட்டத்துறையில் நிலவி வரும் நெருக்கடி நிலை காரணமாக தொழிலாளர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகி இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரத்னசிறி விக்கிரம நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தோட்டத்துறை அமைச்சு நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய பாராளுமன்ற உறுப்பினர், பல்வேறு நெருக்கடி நிலைக்கு ஆளாகி இருக்கும் தோட்டத்துறை நிறுவனம் ஒன்றின் தலைவருக்கு மாதாந்தம் 65ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உணவல்லாத உதவு பொருட்கள்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்கு ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் உணவு அல்லாத உதவு பொருட்களை வழங்கவுள்ளது.

ஜே/40, ஜே/41, ஜே/43, ஜே/45 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த 162 குடும்பங்களுக்கு காரைநகர் மேற்கில் அமைந்துள்ள சைவ மகா சபையில் வைத்து எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும்,

ஜே/42, ஜே/44ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 368 குடும்பங்களுக்கு பாலாவோடை அம்மன் கோவிலில் வைத்து எதிர் வரும் 10ஆம்திகதி புதன் கிழமையும்,

ஜே/46, ஜே/47, ஜே/48 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 203 குடும்பங்களுக்கு காரைநகர் சைவ மகாசபையில் வைத்து எதிர்வரும் 11ஆம்திகதி வியாழக்கிழமையும் இவ் உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

(உ-246)

# கட்டுரைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை பாடசாலை மட்டத்தில் நடத்திய கட்டுரைப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்று முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றவர்கிளின பெயர் விபரங்கள் வருமாறு:-

முதலாமிடம் :- ச. சசிகலா- கிளி / மகாவித்தி.

இரண்டாம் இடம்:- ம.பிளண்டினா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம் :- தி.ஶ்ரீறஜிதா- யா / அருணோதயாக்கல்லூரி.

இவர்களுக்கான பரிசு வழங்கள் நிகழ்வு எதிர் வரும் 14ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

(உ)

# கண்காட்சிப் போட்டியில் 2ஆம் இடம்



அகில இலங்கைப் புத்தாக்கக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சிப் போட்டியில், வடக்கு-கிழக்கு மாகாண மட்ட இடைநிலை பிரிவில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் இடைநிலை விஞ்ஞானக் கழகத்தைச் சேர்ந்த தரம் 7 மாணவன் குமரேசமூர்த்தி மோகன கிருஷ்ணா 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் சான்றிதழையும் மூவாயிரம் ரூபா ரொக்க பரிசையும் பெற்றுள்ளார்.



உரும்பிராய் கிழக்கு சனசமூக நிலைய முன்பள்ளிக் கலை விழாவில் எடுக்கப்பட்ட படம். (படம்: சி. சிவமனோகரன்)




யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் ஒதுக்கிய 50 ஆயிரம் ரூபா நிதி மூலம் புனரமைக்கப்பட்ட பன்னாலை கணேச சனசமூக நிலையத் திறப்பு விழாவன்று எடுக்கப்பட்ட படம். (படம்:சி.செந்தில்செல்வன்)

*கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன*
*வினைபடு பாலால் கொளல்*
*-குறள்-*

வலம்புரி

## சினிமா மோகம்

யாழ்ப்பாணத்தில் இப்போது ஒவ்வொரு வீடுகளும் திரையரங்குகளாக மாறியுள்ளன. தொலைக்காட்சிப்பெட்டிகளின் முன்னால் வயது,பால் வேறுபாடின்றி குடும்ப அங்கத்தவர்கள் இரவு பகலாக குந்தியிருந்து சினிமாப்படங்களைப் பார்க்கின்றனர். இதுவே இன்றைய இளம் சமுதாயத்தில் காணப்படும் கலாசாரப் பிறழ்வுகளுக்கு அடிப்படையாகவுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

கலாநிதி சிவலிங்கராசாவால் தெரிவிக்கப்பட்ட ஆதங்கம் நியாயமானதுமட்டுமல்ல அதனைத் தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றது. இன்றைய சமகாலச் சினிமாப் படங்கள் தனித்து வருமானத்தை நோக்கமாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

ஒரு காலத்தில் சமூக மறுமலர்ச்சி, இரக்கசிந்தை, பாவ புண்ணிய கருத்துக்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் சினிமாப் படங்கள் தயாரிக்கப்பட்டன. அத்தகைய திரைப்படங்கள் இளம் சமுதாயத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்ததுடன் வாழ்க்கைத் தத்துவத்தையும் உணர வைத்தது. ஆனால் இன்று அவை மலையேறி விட்டன. ஆக வாழ்க்கை என்றாலே அது பாலியல் சார்ந்ததென்ற கருத்தோடு இற்றைக் காலத் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. திரைப்படங்களில் வருகின்ற காதல் கற்பனைகள் கட்டிளமைப் பருவத்தினரை மட்டுமன்றி சிறுவர்களைக் கூட அது வேகமாகத் தாக்கி கலாசாரச் சீரழிவுகளுக்கு வழிவகுத்து விடுகின்றது.

குறிப்பாக விரசம், போதை, புகைத்தல் என்பன இல்லாத சினிமாப் படங்களே இல்லை என்னும் அளவிற்கு இன்றைய கால சினிமாப் படங்களின் தரம் மலிந்து போய்விட்டது.

இத்தகைய சினிமாப் படங்களைப் பார்ப்பதாயின் அதற்காகத் திரையரங்குகளை நாட வேண்டிய தேவையிருந்தது. இதனால் சினிமாப்படங்களைப் பார்க்கினற சந்தர்ப்பங்களுக்கு எல்லையிருந்தது.

ஆனால் இன்றைய நிலைமை அதுவன்று. ஒவ்வொரு 'வீடுகளிலும் தொலைக் காட்சிப் பெட்டிகள். 24 மணிநேரமும் சினிமாப் படங்களைப் பார்க்கக் கூடிய வாய்ப்புகள்.

இதனால் இளம் சமூகம் கல்வியில் பின்தள்ளப்படுவதுடன் கலாசாரப் பிறழ்வுகளுக்கும் உட்படுகின்றது.

தமக்கென்றொரு உயரிய கலைத்துவத்திற்குச் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் சினிமா மோகத்தில் மூழ்கியிருப்பது தமிழ்க் கலைத்துவப் பண்பாட்டு அடையாளங்களை அகற்றிவிடுவதற்கான அறிகுறி என்பதை அனைவரும் உணர்வது அவசியமாகும்.

# பிறர் நலன்கருதி வாழ்வதே மனிதப் பிறவியின் நோக்கமாகும்

## வெள்ளி நற்சிந்தனை

சாமான்ய தர்மங்கள் என்று நாம் அன்றாடம் பழக்கத்தில் கொள்ளும் விதிமுறைகளையும், நெறிகளையும் பின்பற்றுவதைக் காட்டுகின்றோம். ஒழுக்கமான நீதி வழுவாத பிறரைப்



பற்றிய சிந்தனைகொண்ட தன்னலமற்ற வாழ்க்கையையே இந்நெறிகள் வலுயுறுத்துகின்றன.

பிறர் துன்பப்படும் போது நம்மால் எவ்வாறு சிரித்துக் கொண்டிருக்க முடியும்? நம்மைச் சுற்றி வேதனையும் அவதிகளும் நிறைந்திருக்கையில் நாம் மட்டும் சுகித்து வாழ்வது சாத்தியமாகுமா?

ஆனால் இந்த சாமான்ய தர்மங்கள் எக்காலத்திலும், எல்லோருக்கும் உடன்பாடு கொண்டது என நினைப்பது தவறு. உதாரணமாக பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து நீராடி இறைவழிபாடு செய்வதே மிக உயர்ந்தது என நம்பப்படுகின்றது. இது எல்லோராலும் செய்யக்கூடியது தான். என்றாலும் சில சந்தர்ப்பங்களில் நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களால் இது இயலுமா? இவ்வாறு செய்வதனால் மேலும் உடல்நலம் குன்றி உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவரவர் தத்தம் மதச் சின்னங்களை நெற்றியில் அணிந்து தியானம் செய்தால் போதும் என்கிறது தர்மசாஸ்திரம். இதனையே நாம் விஷேட தர்மம் என்கிறோம்.

'தியானம் செய்வதைத் தவிர்க்குமாறு இங்கு கூறப்படவில்லை. தியானத்தால் ஆன்ம உயவு ஏற்படுகினறதல்வா? ஆனால் ஒரு காலகடடத்தன்போதுதியானம் செய்வதற்கு முன் செய்யும் முறைகளைச் சற்றுத்தியானம் செய்வதற்கு முன் செய்யும் முறைகளைச் சற்றுத் தளர்த்திடச் சொல்கிறது.

சுகாதார அடிப்படையில் காய்கறிகள் அல்லது பழங்கள் வாங்கி வந்தால் அவற்றைக் கழுவியபின்னரே உண்கின்றோம். ஆனால் எண்ணெய், நெய் போன்றவற்றை அவ்வாறு செய்ய முடியுமா, நாம் ஒருவரோடு ஒருவர் கதைத்துக கொண்டிருக்கும் போது வாயிலிருந்து உமிழ்நீர் வெளிப்பட்டால் உடனே குளிக்காவிட்டாலும் குறைந்த பட்சம் உமிழ்நீர் பட்ட இடத்தைக் கழுவி விடவேண்டும் என்கின்றது தர்மசாஸ்திரம்.

பால் கறப்பதற்கு முன்னர் பசுவின் கன்றை பால்குடிக்க விடுகின்றோம். அதனால் பால் சுரக்கப்பட்டு நாமும் கறந்து கொள்கின்றோம். கன்றுக்கு ஊட்டப்படாவிட்டால் பசுவின் சுரப்பிகள் சுரக்காமலே போகும் என்பதால் முதலில் கன்றினைக் குடிக்க விடுகின்றோம். அதன்பின் கறக்கப்படும் பால் எச்சில் பட்டது தானே? இதனை யாகத்திற்கும் திவச காரியங்களுக்கும் உபயோகப் படுத்துகின்றோம்.

இதுபோன்ற காரியங்களுக்கு எச்சில் பட்டவற்றை உபயோகப் படுத்துவது சரியாகுமா? என்று கேட்டால், இப்படித்தான் பால் சுரக்கப்பட வேண்டும் என்பது இயற்கையின் நியதியாகும். என்பதால் இந்த விடயத்தில் உமிழ்நீர் படுவது ஏற்கப்படுகின்றது.

இதேபோன்று இன்னொரு விடயமும் காகம் எச்சமிட்டால உடனே குளித்துவிடுவோம். முடியாத சந்தர்ப்பங்களில் கழுவிவிடுகின்றோம். ஆலம் பழங்களையும், அரச மரத்தின் பழங்களையும் பறவையினம் உண்டு, அவற்றின் விதைகள் மலம் வாயிலாக வெளியே வருகின்றன. அவற்றில் சில ஆலமரமாகவும் அரசமரமாகவும் முளைத்து விடுகின்றன.

இவ்வாறு பறவைகளின் எச்சங்களமூலம் வெளியேற்றப்படும் அரசு, ஆல் விதைகள் மண்ணில் ஊன்றி விதையாகி பின்பு மரமாகின்றன. விசேட தேவைகளின்போது இம் மரங்களின் குச்சிகளையே யாகத்திற்கும், ஹோமாதி காரியங்களுக்கும் பயன்படுத்துகின்றோம்.

இதுபோலவே எங்கெங்கோ பறந்துசென்று பல்வேறு புஷ்பங்களில் இருந்து தேனை எடுத்து வந்து கூடுகட்டுகின்றன தேனீக்கள். தேன்கூட்டை தேனீக்களுடன் சேர்த்தெடுத்தே நாம் பிழிகின்றோம். இது தான் தேனைப்பெறும் முறை என்பதால் தேன் தேவைப்படும் நேரத்திலெல்லாம் இவ்வாறு பிழிந்தெடுக்கப்பட்ட தேனே உபயோகப்படுத்தப்படுகிறது.

வேதங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வப்போது மனிதன் தனது செளகரியங்களுக்கேற்ப அவற்றை மாறறிக்கொள்கின்றான். ஒரு கொள்கை, ஒரு வழிமுறை இல்லாதிருக்கும் இதனை மிகவும் உயர்ந்த வாழ்க்கை நிலை என்று கூறுகின்றனரே! இது மடத்தனம் அல்லவா? என்று விதண்டாவாதிகள் கூறினால் அப்படிக் கூறுபவர்கள்தான் அறிவற்றவர்கள் என்று அடித்துக் கூறலாம்.

நமது சாதாரண சிந்தனையைக் கொண்டு பகிர்ந்து அறிந்து செயல்பட வேண்டும் என வேதங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. எந்தப் பொருளும் நாம் செய்யும் காரியத்தினால் கெட்டுப்போயோ அல்லது உபயோகமற்றதாகவோ ஆகிவிடுமானால் அந்தக் காரியத்தைச் செய்யாதே என வேத சாஸ்திரங்கள் அழுத்தமாகக் கூறியுள்ளன.

இதன நோக்கம் என்ன? நாணல் செடிகள் போல் நாம் வளைந்து கொடுத்தும் விட்டுக் கொடுத்து, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கால நேரத்திற்கு தகுந்தால் போல் புரிந்து கொள்ளவில்லையானால் தர்மங்கள் நிலைக்காது.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சுயதர்மம் என்று இருப்பதால் அந்தத் தர்மத்தை நீக்கிவிட்டு நமது காரியத்தை செயறபடுத்தினால் உலக இயக்கமே காலப் போக்கில் ஸ்தம்பித்து விடும்நிலை ஏற்படலாம்.

காலையில் செய்ய வேண்டியதை மாலையிலும். மாலையில் செய்யவேண்டியதை காலையிலும் செய்வதனால் பல்வேறு தடைகளும், பல முரண்பாடுகளும் ஏற்படும் என்பதுடன் மனிதனின் உடல்நிலை பாதிப்படைந்து மனநிலை குழப்பத்திற்கும் ஆளாகுதல் நிச்சயம்.

இதிலிருந்து புலனாவது யாதெனில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அதனைச் செய்யவேண்டிய மனிதன் நல்ல ஆரோக்கியம், நல்ல மனநிலையில் இருப்பதற்காக நெறி

டாக்டர்
கே. வி. நாதன்

முறைகளை காலத்திற்கேற்றால் போல் மாற்றி அமைத்துக்கொள்ளலாம் எனச் சாஸ்திரங்கள் உறுதிபடக்கூறுகினறன.

எனவே தர்மங்களை நிலையாக வைததிருக்க வேண்டியது அவசியம். தர்மம் நிலைத்திட பிறர்நலம் கருதுவதே ஏற்றதாகும். □

## கைத்தொழில் சம்மேளனம் ஸ்தாபகம்

(கொழும்பு)

கொழும்பில் வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இச் சம்மேளனத்தில் இலங்கை உட்பட பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்தச் சம்மேளனம் மேற்படி 5 நாடுகளிலும் வர்த்தக முதலீட்டு நடைமுறைகளை ஊக்குவிக்கக் கூடிய வழிவகைகள் குறித்து ஆராயும். (தி-61)

## இன்னிசை வழிபாடு

(காரைநகர்)

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நாளை சனிக்கிழமை பி.ப.3.30க்கு "இறைவருகை" இன்னிசை வழிபாட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(உ-246)

# பருவகாலச் சீட்டு பயன்பாட்டில் பெருமளவு ஆள் மாறாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்டுவரும் பருவகாலச் சீட்டுப் பயன்பாட்டில் ஆள் மாறாட்டம் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து, பருவகாலச் சீட்டு வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் பயில்வோர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுவந்த விசேட கழிவுடன் கூடிய பருவகாலச் சீட்டுக்களிலேயே இத்தகைய நூற்றுக்கான ஆள்மாறாட்டச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, பருவகாலச் சீட்டுகள் வழங்கப்படுவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும்,

பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பருவகாலச் சீட்டுகள் வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இம்மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

## தினசரி தியானம்

### ஜெபம்

ஜெபம் முடிந்த உடனேயே அந்த இடத்தைவிட்டு அகன்று விடாதீர்கள். மற்றவர்களுடன் கலந்து விடவேண்டாம். உலக நடைமுறைகளில் மூழ்கி விடாதீர்கள். ஒரு பத்துநிமிடமாவது சில பிரார்த்தனைப் பாடல்களை உச்சரித்துக் கொண்டாவது இறைவனையும் அவனது எல்லையில்லா அன்பை நினைத்துக்கொண்டு அமைதியாக இருங்கள். பிறகு மனப் பூர்வமான பயபக்தியுடன் அவ்விடத்தை விட்டு அகன்று வழக்கமான பணிகளைத் தொடருங்கள்.

சுவாமி சிவானந்தர்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

# யாழ். மாநகரசபைக்கு கழிவுநீர் அகற்றும்இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அவசரகால நிலைமையின் போது, செஞ்சிலுவைச் சர்வதேச குழுவானது, யாழ்.குடாநாட்டில் நீர், சுகா தாரம் தொடர்பான வேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தியது.

இத்திட்டத்தின் கீழ், இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம்களில் நீர் விநியோகம், கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் மலசல கழிவு அகற்றல் தொடர்பான விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

கடந்த இரு வருட காலத்தில். இடம் பெயர்ந்த மக்கள் படிப்படியாக தமது வீடுகளுக்குத் திரும்பியதனாலும் உரிய அமைப்புக்கள் தமது பொறுப்புக்களை கையேற்று இதே மாதிரியான செயற்பாடுகளை இடம் பெயர் முகாம்களில் நடைமுறைப் படுத்துவதனாலும், இவ்வேலைத் திட்டத்திலிருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது விலகியது.

இருபபினும் யாழ்.மாநகர சபைக்கு கழிவுநீர் அகற்றும் இயந்திரம் மற்றும் அதற்கான சேமிப்பு தாங்கியினையும் அன்பளிப்புச் செய்வதன் மூலம் தனது ஒத்துழைப்பினை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவானது தொடர்ந்தும் வழங்கிவருகின்றது.

மேற்படி இயந்திரக் கையளிப்பு நேற்றுஇடம் பெற்றமை குறிப்பிடத்தகது.

(உ)

# ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து சமாதானத்தை முன்னெடுப்பார்கள்!

## ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் நடைபெற்றுவரும் புரிந்துணர்வுப் பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகளை விரைவில் ஆரம்பிக்குமென்று தாம் நம்புவதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் சொய்ஷா காவக்குச்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் சமாதானச செயற்பாடுகள் தேக்கமடைந்திருப்பதற்கு அரசியல் நெருக்கடி நிலையே காரணம். இதனால் இந் நிலைமை குறித்து ஜப்பானிய அரசாங்கம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

தற்போதய நெருக்கடி நிலையிலும், சமாதான செயற்பாடுகளில் தொடர்புடைய விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் சமாதானம் வெற்றியடைய அர்ப்பணிப்புடன் செயற்படுவது திருப்தியளிக்கின்றது.

அரசியல் நெருக்கடியைத் தீர்க்க உயர் தலைவர்களுக்கிடையே நடைபெற்று வரும் பேச்சுக்களின் மூலம் சமாதான முயற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் உருவாகும் என்று நம்புவதாகவும் யப்பானிய வெளி விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(இ)

# இலங்கையில் சமாதானம் மலர பிரிட்டன் பங்களிக்க வேண்டும்!

### வண.பிதா ஜெயக்குமார் நிக்சிலிங்கரிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் கண்ணியத்துடன் கூடிய சமாதானத்தையே விரும்புகின்றனர். எனவே இலங்கையில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் விசேடமாக பிரிட்டன் தமது முழுமையான பங்களிப்பை செலுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு வண.பிதா சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சின் வெளியுறவுக் கொள்கைக்கான உதவிப் பணிப்பாளர் கேணல் நிக்சிலிங்கரிடம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் குடாநாட்டு நிலைமைகளைக் கேட்டறிந்தனர். (இ-16,43)

# காரைநகர் கஜ"னா கடலை புனித தீர்த்தமாக்க மக்கள் எதிர்ப்பு

(காரைநகர்)

காரைநகர் கஜ"னாக் கடற்கரையை, ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் புனித தீர்த்தமாகவும் அதனைப் புனித பிரதேசமாகவும் பிரகடனப்படுத்த ஆலய அடியார்கள் சபை நேற்று மேற்கொண்ட அங்குரார்ப்பண நடவடிக்கையை, அப்பகுதி பொது மக்கள் வன்மையாகக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 8 மணியளவில் கஜ"னாக் கடற்கரைச் சந்தியில் ஒன்று திரண்ட நூற்றுக்கும் அதிகமான பொது மக்கள், அடியார் சபையின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பொது மக்கள் எவரையும் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டாம் என்றும் ஒலிபெருக்கியில் அறிவிப்பு விடுத்தனர்.

மககளின் எதிர்ப்பினால அடியார் சபையின் அங்குரார்ப்பண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. மேலும் இவ் அங்குரார்ப்பண நிகழ்வுக்காக கொழும்பில் இருந்து வருகை தந்த அடியார் சபை உறுப்பினர்கள் நால்வரை வாகனத்தில் இருந்து கீழே இறங்கவிடாமல் தடுத்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

ஆலய தர்மகர்த்தா மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரின் அனுமதி இன்றி மேற்படி அடியார் சபை அங்குரார்ப்பண நடவடிக்கைகளுக்கு ஒழுங்கு செய்திருந்ததாகவும் கடந்தகாலத்தில் தர்மகர்த்தா மற்றும் நிர்வாகததிற்கு எதிராக அடியார் சபை நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தின போது 'ஈழத்துச் சிதம்பரம் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெறுக'', 'கொழும்பிலிருந்து கொண்டு ஆலயத்தை நிர்வகிக்காதே' எனும் வாசகங்களைத் தாங்கிய சுலோக அட்டைகளும் காணப்பட்டன. (இ-246)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் [illegible]வணை நாகேஸ்வரி மகா வித்தி[illegible]யத்தில் அதிபர் பதவி வெற்[illegible]ம் ஏற்பட்டுள்ளது இப்பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 2.1,1 சேர்ந்தவர்களும் எதிர் வரும் 3ம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஊடகவியலாளர் சங்கத்துடன் சந்திப்பு

## ஜனாதிபதியும்..

இத்தகைய சூழ்நிலையில் ஜனா

# நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

## 1.படவரைஞராக பதிவு செய்தல் - 2004

2004ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களும் 2003ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

## 2.வியாபார உரிமம் அனுமதிப் பத்திரம் - 2004

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2004ம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தை 2003ம் ஆணடு டிசம்பர் 31ம் திகதிக்குள் பெற்று பூர்த்தி செய்து கொக்குவில்/ நல்லூர் உப-அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## 3.நல்லூர் பிரதேச சபை ஆதன வரி அறிவித்தல் 2003/நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

2003ம் ஆண்டு 4-ம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 31-12-2003ம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக எதுவித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் 15%

ஏனைய காணிகள், கட்டிடங்கள் 20%

நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.134(5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டிடங்கள், மதில் மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியததருகின்றேன். எனவே கட்டிடங்கள், மதில், மலகூடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டுமென அறியத் தருகின்றேன். முன்அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டிடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

## 5.வெற்றுப் போத்தல் விற்பனை

கீழ்க் குறிப்பிட்ட வகையான வெற்றுப் போத்தல்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. 750 மி.லீ. - முழுப் போத்தல்
2. 725 மி.லீ. - கோடியல் போத்தல்

தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 2.1,1 சேர்ந்தவர்களும் எதிர்வரும் 3ம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்விப் .பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஊடகவியலாளர் சங்கத்துடன் சந்திப்பு

(திருநெல்வேலி)

மலேசியத் தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கக் குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை. யாழ்.பீச்இன் ஹேறட்டலில் யாழ்.ஊடகவியலாளர் சங்கத்தினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இச் சந்திப்பின் போது யாழ். குடாநாட்டு ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (ந-43)

---

### புலிகளின்...

கொண்டிருக்கிறது.

இலங்கையில் பாதுகாப்பு, இறைமை ஒருமைப்பாடு என்பன குறித்து இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது போது இதனை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவருக்குத் தெளிவாக விளக்கியிருந்தார்.

இலங்கையின் சமாதான விடயத்தை இந்தியா வேறு கோணத்தில் பார்க்கின்றது என்று எவரும் தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடாது. இதனை சரியான கோணத்தில் மிகத் தெரிவாகவே அவதானிக்கிறது இவ் விடயத்தில் இந்திய மிகவும் விழிப்பாக இருக்கின்றது.

சமாதான விடயத்தில்இந்தியாவுக்குமிக முக்கியமான பங்கு இருக்கின்ற போதிலும் இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் கோரிக்கைக்கு அமைவே இந்தியா அதில் தலையிட முடியுமென்றும் அவர் கூறினார்.

இதேவேளை இக்கருத்தரங்கில் ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

எதிராக அடியார் சபை நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தின போது 'ஈழத்துச் சிதம்பரம் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெறுக'', 'கொழும்பிலிருந்து கொண்டு ஆலயத்தை நிர்வகிக்காதே' எனும் வாசகங்களைத் தாங்கிய சுலோக அட்டைகளும் காணப்பட்டன. (இ-246)

---

### ஜனாதிபதியும்..

இத்தகைய சூழ்நிலையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் தொடர்ந்தும் பேச்சுக்கள் இடம் பெறுவதில் எதுவித அர்த்தமும் இல்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

இதன் தாக்கம் உணரப்பட்டிருக்கின்ற நிலையில், ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில், எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்னர் இறுதி முடிவொன்று எட்டப்பட வேண்டுமென்ற நோக்கில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றது. இவ்வாறு பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் மீண்டும் இன்று சந்திப்புக்களில் ஈடுபடுவார்கள் என்றும் பீரிஸ் தெரிவித்தார். (இ)

---

### அதி உயர்...

பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சராகச் செயற்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-5)

---

### ஜனாதிபதியும் பிரதமரும்...

வாக்கியிருப்பதால் இதற்கு ஓர் முடிவு கட்டும் வகையில் இரு தலைவர்களும் மிக முக்கிய விடயங்கள் குறித்து இச் சந்திப்பில் ஆராயவுள்ளனர்.

இதேவேளை இச் சந்திப்பில் எடுக்கப்படக் கூடிய முடிபுகள் சிறப்பானதாக அமையாவிடில் தொடர்ந்தும் இணக்கப்பாடு குறித்து பேச்சுக்களில் ஈடுபடாமல் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு அறிவிக்குமாறு பிரதமர் ரணில் ஜனாதிபதியைக் கோரலாமென்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேச்சு அடிபடுகிறது. (இ)

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டிடங்கள், மதில் மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியததருகின்றேன். எனவே கட்டிடங்கள், மதில், மலகூடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டுமென அறியத் தருகின்றேன். முன்அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டிடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

## 5.வெற்றுப் போத்தல் விற்பனை

கீழ்க் குறிப்பிட்ட வகையான வெற்றுப் போத்தல்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. 750 மி.லீ. - முழுப் போத்தல்
2. 725 மி.லீ. - கோடியல் போத்தல்
3. 450 மி.லீ. - சிறிய போத்தல்

## 6.நல்லூர் பிரதேச சபை நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல்-2004

1987ம் ஆண்டில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதன வரி அறவீடு நடப்பு வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2004ம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2004ம் ஆண்டிற்கான ஆதன வரியை 31-01-2004ம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்த கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20 %மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31-01-2004ம் திகதிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரி இறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## 07.சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் அவர்களால் 1980ஆம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர்ப் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 22-11-2000ஆம திகதிய 1159/22ம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் 'ஆ'பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக இப்பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற, உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே,சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடனோ/ உப-பணிமனைகளுடனோ தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெறநடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 01-01-2004ற்கு முதல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரம் சகல உப-பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**செல்லையா செல்வரத்தினம்**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

04-12-2003

|C/6965|

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.